Vol· XVII 1939—1940

செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

பதினேழாம் சிலம்பு

இதழாசிரியர் கூட்டத்தலைவர்:
திருவாளர் பண்டித ந. மு.
வேங்கடசாமி நாட்டாரவர்கள்

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம், லிமிடெட்.

பிரமாதி ஆ௵

The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd.
Tinnevelly and Madras.

All Rights Reserved]

'செந்தமிழ்ச் செல்வி' இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

(Editorial Board Members)

தலைவர் :

திருவாளர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்,
தமிழாசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்.

---

2. ,, P. சிதம்பரம் பிள்ளையவர்கள், B.A., B.L.,
வக்கீல், நாகர்கோவில்.

3. ,, கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், M.A., M.L.,
அட்வகேட், தாகூர் சட்ட விரிவுரையாளர்.

4. ,, துடிசைகிழார் A. சிதம்பரனாரவர்கள்,
பென்ஷன் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், கோவை.

5. ,, பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாரவர்கள்,
தமிழ்ப்பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

6. ,, T. S. கந்தசாமி முதலியாரவர்கள், B. A.,
வழக்கறிஞர், சாத்தூர்.

7. ,, காழி. சிவ. கண்ணுசாமிப் பிள்ளையவர்கள், B. A.,
தருமபுரவாதீன வித்துவான், சென்னை.

8. ,, வித்துவான் மா. இராசமாணிக்கம் அவர்கள், B.O.L.,
தமிழாசிரியர், முத்தையாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை.

The Progressive Printers, 2/17 Coral Merchant Street, G. T., Madras.

உள்ளுறை

அகத்துறையுட்கண்ட சில கற்புமுறைகள்—
M. K. தணிகாசலம், திருவையாறு ௫௮௭

அடாது அட்ட அமுதம்—வித்துவான் அன்பு கணபதி ௫௨௮

அந்திப்பொழுது—சி. து. கன்னிசாமி ௩௫௧

அழகநம்பி—வித்துவான் அ. சிதம்பரம் ௪௮௨

அறிஞர்களும் அவர்தம் வரலாறும்—வித்துவான் அ. கிருட்டினமூர்த்தி ௪௧௭

அறிவின்மையைப் போக்குவதெப்படி?—
ஈழத்துச் சிவானந்த அடிகள், பி.ஏ., ... ௪௮௯

அறிவுடைநம்பி—பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் .... [illegible]

அறிவுநூற் கலையும் சமயமும்—T. S. கந்தசாமி முதலியார் B. A. ௪௫௮, ௫௦௩

அன்பின்வெற்றி—மறை. திருநாவுக்கரசு ௨௭௯

அனைவருக்கும் படிப்பு அவசியம்—ராவ் சாஹேப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் ௫௨௫

ஆறு (புதுப் பாட்டு)—சி. து. கன்னிசாமி ௩௮௮

இசை இன்பம்—N. K. வேலன் B.A. ௧௭௪

இசையும் கோலையும்—க. ப. சந்தோஷம், B.A., L.T. ௬௫

இந்தியாவின் பண்டைக்கலை—வித்துவான் மா. இராசமாணிக்கம் B. O. L. ௨௫௮, ௩௦௫

இருபதாம் நூற்றாண்டுப் புலவர்—வித்துவான் மா. இராசமாணிக்கம் B. O. L. ௫௭௫

இலக்கிய நூல்களின் அமைதி—இளவழகனார் ௫௧௮

இலக்கியமும் வரலாறும்—வித்துவான் அ. கிருட்டினமூர்த்தி ௩ ௪௫

‘ இலனென்னு மெவ்வ முரையாமை ஈதல்
பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள், யாழ்ப்பாணம் ௫௬௯

ஈசானியமடம் இராமலிங்க சுவாமிகள் ௫௧

உக்கிரப் பெருவழுதி—பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் ௩௬௯

உடைந்த பாலம்—காழிக்கண்ணன் ௩௦௮

உலகத்தோற்றம்—N. K. வேலன் B.A. ௨௫௬

உழைப்பு—ஔவை சு. துரைசாமிப் பிள்ளை ௨௩௦, ௨௮௨

ஊணும் உறக்கமும்—மு. வரதராஜன், B. O. L. .... கருசா, உ0க, உசகூ
ஊழிக் கனவு—N. K. வேலன் B.A. .... சஉ
எதிரொலி—N. K. வேலன் B.A. .... சஅசா
எழுத்து: இதன்பெயர்க் காரணம்—வித்து வான் அ. கிருட்டினமூர்த்தி ... சஎக
எழுதோணு ஓவியம்.—கோவைவாணன் ... ருஎகூ
என் நண்பன் சின்னப்பன்—மகிழ்நன் .... ககூ
கட்டுரைத்த கனவு—வித்துவான் அ. சிதம்பரம் .... எங
கடவுள் வழிபாடு—மறை. திருநாவுக்கரசு .... உஙரு
கலித்தொகை மாநாடு .... ருருச
கலித்தொகையி லொருகதை—மகிழ்நன் ... உஉரு, உஎங, ஙருஎ, ஙஅச, ருஉக, ருஅங
கள்ளனைத் திருத்திய கன்னிகை—மறை திருநாவுக்கரசு .... கஎஎ
காப்பியத்துறைத் தெளிவு—வரகூர்வேங்கட ராமன் .... ஙகூ
கால்டுவெல் ஒப்பிலக்கணம்—காழி. சிவ. கண்ணுசாமி B. A. .... ஙகங, ஙசா0, ஙகூ0, சசங, ரு00
காலம்எனும் சொல் எம்மொழிக்குரியது? வித்துவான் ஞா. தேவநேயப் பாவாணர் ஙசாச
காலைப்பாட்டு—தேசிகவிநயகம் பிள்ளை க0ச
காளையொன்றின் வரலாறு—காழிக்கண்ணன் .... கூஎ, ககாரு, உகஎ, ஙசாங, சஙக, ருசரு, ருகூரு.
சங்ககாலப் பெண்மணிகள், திருவாட்டி கண்ணம்மாள் அம்மையார் .... ருசாக
சிருங்கார ரஸம்—பண்டித ந. மு. வேங்கட சாமி நாட்டார் .... சசாரு
செந்தமிழ்ச் செல்வி வாழ்த்து க. வேலுப்பிள்ளை .... க0கூ
செந்தமிழ்ச்செல்வி வாழ்த்துரை அ. கிருட்டினமூர்த்தி .... அ
செய்திகளும் குறிப்புகளும்— .... ருஉ, கக0, கஅஎ, உஉஉ, சசாஉ, ருருஎ, ருகூகூ.
சோகரஸம்—ஆசிரியர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் .... சஙஎ
ஞானியார் சுவாமிகள்—அ. சிதம்பரநாத செட்டியார் M. A. .... ஙஎச

தமிழ் இலக்கியங்களில் காணப்படும் இசைப் பகுதிகள்—ஆசிரியர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் ௧௬௯
தமிழ் இலக்கியமும் மதிப்பீடும்—வித்துவான் அ. கிருட்டினமூர்த்தி ௫௩0
தமிழ் எழுத்தின் தனிச்சிறப்பு—சுவாமி சுத்தானந்த பாரதியார் ௩௩௧
தமிழ்மகளிர் செயற்குரிய பணிகள்—வித்துவான் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை ௨௪, ௬௯,
தமிழ்மறைச் சிங்கம்—திரு. மாடபூசி ரெ. திருமலை அய்யங்கார் ௪௫௩
தமிழில் முடியுமா?—இசைச்செல்வர் திரு. தி. இலக்குமணப்பிள்ளை ... ௪௨௬
தமிழும் சமயமும்—திரு டி. கெ. சிதம்பரநாத முதலியார், B. A, B. L. ௫௧௩
தலைச்சோறு—வித்துவான் மு. வரதராஜன் B. O. L ௩00
திராவிடமொழிகள்—காழி சிவ. கண்ணுசாமிப் பிள்ளை ௪௮, ௯௪
திரிசூலம்—திருவரங்க நீலாம்பிகை அம்மையார் ௩௨௮
திருக்குறள் உவமானத்திற்கு அழகு—துடிசைகிழார் அ. சிதம்பரனார் ௫௭, ௧௬௧
திருக்குறளில் ஓர் அகப்பை—தமிழ் மறைத் தொண்டர் ௩௪, ௧௮0
திருத்தணிகைக் கலிவெண்பா—வ. சு. செங்கல்வராய பிள்ளை M. A. ௩௧
திருத்தொண்டர் விரதம் (பாட்டு)—சுத்தானந்த பாரதியார் ௩0௨
திருமந்திரம்—துடிசைகிழார் அ. சிதம்பரனார் ... ௧௮௪
திருமூலர் தமிழ்மூவாயிரம்—துடிசைகிழார் அ. சிதம்பரனார் ... ௧௪௫
தூத்துக்குடி சைவசித்தாந்த சபை விழாத் தலைமை—கா. சுப்பிரமணிய பிள்ளை M. A., M. L. பேருரை ௫௫0
தென்காசி திருவள்ளுவர் கழகத்தின் 12-ம் ஆண்டுவிழா—தலைமையுரை (ந. மு. வேங்கடசாமி நாட்டார்) ௧௧௩
தைப்பொங்கல்—வித்துவான் பெ. கோவிந்தன் ௪௭௯

நஞ் செல்வி—கா. சிவ. க. ௧

நல்லாசிரியர்கள் தோற்றமும் தாய்நாடும்—
வித்துவான் அ. கிருட்டினமூர்த்தி ௩௭௮

நறுவீ முல்லை ௮௮, ௧௪௭,
௨௧௪, ௨௫௩, ௨௯௨

நாட் குறிப்பின் பயன்—வித்துவான்
மு. வரதராஜன் B.O.L. ௪௧௪

நாமகளம்மானை—சி. து. கன்னிசாமி ௫௧௭

நாரைவிடுதூது (ஆங்கில மொழிபெயர்ப்பு)—
காழி. சிவ. கண்ணுசாமி பி. ஏ. ௧௫௧

நால்வர் வழியில் நலம்—பிரசங்க பூஷணம்
பு. பா. இரத்தினசபாபதி நாயகர் ௪௦௯

நிலவு—வித்துவான் பெ. கோவிந்தன் .... ௰

நீத்தார் கடனும் தமிழர் மரபும்—வித்துவான்
மா. இராசமாணிக்கம் B. O. L. ௪௯௩, ௫௪௦

நீர்மூழ்கிக் கப்பல்—N. K. வேலன் B. A. ... ௧௩௪
௨௨௪

நூல்களின் தோற்றம்— இளவழகனார் ௩௪௯

நூல்களின் இருவகுப்பு— ,, ... ௪௫௧

நூல்வரவு ௧௧௨, ௧௬௮,

நெற்பயிரும் பொற்பணியும்—வே. ப. கமல
நாதன் ௩௫௨

பண்டை இந்தியக்கலை—வித்துவான் மா.
இராசமாணிக்கம் B. O. L. ௪௦௬, ௪௪௮,

பண்டைத்தமிழர் காலக்கணக்கு முறை—
பண்டித ஞா. தேவநேசன் ௨௬௧

பண்டைத்தமிழர் நெறி—வித்துவான் மா.
இராசமாணிக்கம் B. O. L. ௧௨௮

பத்துப்பாட்டு மாநாடு ௫௧௨

பரிபாடல்—S. நடேசன் பி. ஏ., எப்.
ஆர். ஈ. எஸ். ௮௬

பாணர்—வித்துவான் ஞா. தேவநேயப்
பாவாணர் ௧௧, ௮௧

புதுச்செய்யுள்—வித்துவான் பெ. கோவிந்தன் ௨௨௧

புதைந்த நகரங்கள்—வித்துவான் மா.
இராசமாணிக்கம் B. O. L. ௧௯௧

புறநானூற்றுச் செய்யுள்—இளவழகனார் ௫௬௬

பெண் அஃறிணையா? வித்துவான் மு. வரத
ராஜன் B. O. L. ௫௯௧

பெருந்துறை வரலாறு—வ. சு. செங்கல்வ ராய பிள்ளை M. A. உ௬0

மண்ணும் விண்ணும்—N. K. வேலன் B. A. ௧0௫

மதிப்புரை .... உ௭௧, ௯௧௭, ௯௬௭, ௪௧௬, ௫௧௧, ௫௬0, ௫௬௬.

மரக்குதிரை என்னும் 'சைக்கிள்' திரு. N. K. வேலன் B. A. ௫௭௯

மாணிக்க நாயக்கர் அவர்களின் முடங்கல் உ௧0

மான், சிலந்தி (பாட்டு)—வித்துவான் பெ. கோவிந்தன் ௯0௪

மானவருங்கலம்—வித்துவான் பெ. கோவிந்தன் ௫௭0

முகில்—வித்துவான் பெ. கோவிந்தன் ௮0

முசுகுந்த சோழன்—வித்துவான் கி. சாமிக் கண்ணு முதலியார். ... ௫௯௮

முண்டா மொழிகள்—காழி. சிவ. கண்ணுசாமி B. A. ௧௫௯

முதியவர் கல்வி—துடிசைகிழார் அ. சிதம்பரனார் ௯உ௧

மோஹென்ஜோதாரோ—காழி சிவ. கண்ணுசாமி B. A. உ௬௮

வடஇந்திய மொழியினங்கள்—காழி சிவ. கண்ணுசாமி B. A. உ0௪

வடக்கிருத்தல்—கோவைகிழார் ... ௧உ0

வல்லரசு (நாடகம்)—கோபாலை நெல்லையப்பன் உ௬௬, ௯௮

வார்தா ஹிந்தி— ௪௬உ

வியாசம்—ரா. பி. சேதுப்பிள்ளை B.A.,B.L உ௮௭

விருந்தோம்பல்—திரு. ஜி. சுந்தரமய்யர் ௬௧

வில்லியும் துரைச்சியும்—க. ப. சந்தோஷம் B. A., L. T. ௧௯௮

வேண்டுமென்றால் வெண்ணையையும் நூற்கலாம்— ௪௯௬

உருவப் படங்கள்

க. திரு ஈசானியமடம் இராமலிங்க சுவாமிகள்

உ. ,, சி. தேசிகவிநாயகம் பிள்ளை

ங. ,, கொ. இராமலிங்கத் தம்பிரான்

ச. ,, வித்துவான் மா. இராசமாணிக்கம் B.O.L

ரு. ,, வித்துவான் மு. வரதராஜர் B.O.L.

சு. ,, T. S. கந்தசாமி முதலியார் B. A.

எ. தமிழர் திருமண மாநாட்டு மகளிர் கூட்டம்

அ. திரு பு. பா. இரத்தின சபாபதி நாயகர்

கூ. ,, திருமுருக கிருபானந்தவாரியவர்கள்

ய. ,, புரிசை முருகேச முதலியார்

கக. ,, சர் ஆ. தா. பன்னீர்ச்செல்வம்

கஉ. ,, ச. வேதநாயகம் பிள்ளையவர்கள்

சிலம்பு-கஎ] பிரமாதி—சித்திரை [பரல்-க

அறிவுடை நம்பி

[ஆசிரியர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்]

அறிவுடை நம்பி என்பவர் அமிழ்தினும் இனிய தமிழ் மொழியின்கண் அரும்பொருட் கருவூலமாக விளங்கும் சங்கச் செய்யுட்களை இயற்றிய சான்றோருள் ஒருவராவர். இவர் வழி வழியாகத் தமிழினை வளர்த்த தென்னர்குலத் தோன்றல் என்பது இவர் பெயர் 'பாண்டியன் அறிவுடை நம்பி' என அடையொடு புணர்த்து வழங்கப்படுமாற்றால் அறியலாகும். நம்பி என்பது ஆடவரிற் சிறந்தாரை யுணர்த்துவதொரு சொல். இச்சொல் முழுமுதற் கடவுளையும், மற்றும் தேவரிற் சிறந்தாரையும், கடவுளடியாரையும் குறிக்கவும் வழங்கும். சீவக சிந்தாமணி, இராமாயணம் என்னும் காப்பியங்களின் தலைவர்களாகிய சீவகனும் இராமபிரானும் நம்பி என்னும் சிறப்புப்பெயராற் பலவிடத்தும் வழங்கப்பட்டிருப்பதும், சுந்தர மூர்த்தி நாயனார் தாம் பாடியதொரு பதிகத்தின் திருப்பாட்டிறுதி தோறும் 'நாட்டியத்தான் குடி நம்பீ' என இறைவனை விளித்திருப்பதும், திருத்தொண்டத்தொகையில் 'கலைமலிந்தசீர் நம்பி கண்ணப்பர்' என்றாற்போல நாயன்மார் ஒன்பதின்மர்க்கு நம்பி என்னும் அடை கொடுத்திருப்பதும், அவர் தாமும் நம்பி ஆரூரர் எனப் பெயர் சிறந்திருப்பதும் ஈண்டு அறியற்பாலன. பிங்கல நிகண்டும் ஆடவர் சிறப்புப்பெயராக இதனைக் குறித்துளது. எனவே, அறிவுடை நம்பி என்பதிலுள்ள நம்பி என்பதும் சிறப்புப்பற்றி எழுந்ததொரு பெயரேயாதல் வேண்டும். இவ் வரசர் பெருந்தகை நிரம்பிய கல்வியறிவும், சான்றோர்களைத் தமராகக்கொண்டு அவர் சொற்படி யொழுகும் நற்பண்பும் வாய்ந்தவர் என்பது தேற்றம். விழுமிய குணங்களும் மெய்யுணர்வும் சான்ற பிசிராந்தையார் என்னும் புலவர்பெருமான்

தமக்கு ஆண்டு பலவாகியும் நரையில்லாமைக்குக் கூறிய கார ணங்களில் 'வேந்தனும் அல்லவை செய்யான் காக்கும்' என்றி யம்பியதற்கு இலக்காக நின்றவர் இவ்வறிவுடை நம்பி என்று கருதுதல் பொருத்தமே. பிசிராந்தையார் ஒருகால் நம்பி யுழைச் சென்ற பொழுது, பொருண்மொழிக் காஞ்சியாக ஓர் அழகிய செய்யுட் கூறினர் காய்த்த நெல்லை அறுத்துக் கவள மாகக் கொடுக்கப் பெற்றால் ஒரு மாவிற் குறைந்த நிலத்தில் விளைந்த கதிரும் பல நாளைக்கு உணவாகும்; நூறு செய்யாயி னும் யானை தனித்துப் புக்கு உண்ணுமாயின் அதன் வாயின்கட் புகுந்த நெல்லினும் காலாற் கெடுக்கப்படுவது மிகுதியாகும்; அப் பெற்றியே அறிவுடைய அரசன் இறைகொள்ளும் நெறியை அறிந்து கொள்ளின் அவனது நாடு கோடிப்பொருளைத் தேடிக் கொடுத்து, தானும் மிகவும் தழைக்கும்; அவன் அறிவால் மெல்லியனாகி, நாடோறும் தகுதியறியாத ஆரவாரத்தை யுடைய சுற்றத்தோடு கூடி, அருளின்றிக் குடிகட்கு அன்பு கெடுமாறு கொள்ளும் பொருளை விரும்பின், அந்த யானைபுக்க விளைபுலம் போலத் தானும் உண்ணப்பெறான்; உலகமும் கெடும்' என்பது அதன்கண் அமைந்த பொருளாகும். 'அச் செய்யுளிற் போந்த அறிவுடை வேந்தன்' என்பதற்கு இலக்கிய மாக விளங்கினமையே இவர் அறிவுடை நம்பி என்று பெயர் கூறப்படுதற்கு ஏதுவாயிற்றுப் போலும்! நச்சினார்க்கினியர் கருத்துப்படி இச் செய்யுள் வாயுறை வாழ்த்தாயினும், வேம்பும் கடுவும் போல வெய்தாகக் கூறும் சான்றோரது அறிவுரையை யும் இவ்வரசர் உவப்புடன் ஏற்கும் அறிவுடையார் என்பது பெறப்படும்.

இனி, இவ்வரச கவியாகிய நம்பி பாடியனவாக நற்றிணை யில் (கரு) ஒன்றும், குறுந்தொகையில் (உ௱௦) ஒன்றும், அக நானூற்றில் (உ அ) ஒன்றும், புறநானூற்றில் (க அ அ) ஒன்றும் ஆக நான்கு செய்யுட்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் அகப் பொருட் பகுதியாகிய மூன்று செய்யுளும் தோழிகூற்றாகவும், வரைவுகடாவுங் குறிப்பினவாகவும் இருத்தலின், இவரது காதற் கிழமைபற்றிய வரலாறு இவற்றின் உட்கிடையாகுங் கொல் எனக் கருதுதல் இழுக்கன்றாம் என்க. நல்லிசைப் புலவ ராயினர் தமது மெய்வரலாற்றை இங்ஙனம் குறிப்பிற் புலப் படுத்துதல் வழக்கேயென்பதற்குச் சான்றுகள் பலவுள்ளன.

மேலே குறித்த நற்றிணைச்செய்யுள் 'வரைவுநீட்டித்த வழித் தோழி தலைமகற்குச் சொல்லி வரைவுகடாயது' என் னும் கருத்தினையுடையது. 'முழங்குகின்ற அலைகொணர்ந்து

கொழித்த பெரிய எக்கர் மணலை நுண்ணிய துகிலின் நுடக்கம் போலத் தோன்றுமாறு காற்று மிகுதியாகத் தூற்றுநிற்கும் கடற்கரையையுடைய தலைவனே, நீதான் பூப்போன்ற எம் தலைவியின் நலத்தைப் புதுவதாக நுகர்ந்துவைத்தும் அதனை மறந்தாயாகலின் அதனாலாய வருத்தம் அடராநிற்க, எமது உள்ளத்தே தாங்குமளவும் தாங்கி, மாசற்ற கற்பினையுடையா ளொருத்தி தன் குழவியைப் பலியிடுதற்குக் கணவன் வாங்கு தலும் அதனைக் கைவிட்டாற்போல, முன்னாள் முதற்கொண்டு எம்முடன் வளர்ந்துவந்த நாணினையும் கைவிட்டேம்; இனி இவ்வூர் அலரெழுவதாக' என்பது அச் செய்யுளின் பொருள்.

இதில், காற்றினால் தூற்றப்படும் நுண்மணற் பரப்புக்கு நுடங்கும் துகிலை உவமை கூறியிருப்பது இயற்கையொடு பொருந்தியுள்ளமை காண்க. கடல்கொழித்து ஒதுக்கிய எக்கர்மணலிற் சிலவற்றைக் காற்று அள்ளித் தூற்றுதல் போல நின்னால் நீக்கப்பட்ட எம்மை ஊரார் அலர்தூற்றா நிற்பர், என இவர் உள்ளுறை அமைத்திருக்கும் திறப்பாடு பாராட்டற் குரியது. காமமும் நாணும் ஒருங்கே தாங்குதற்கரியன என்ப தும், காமவெள்ளத்தால் நாண் என்னும் சிறை அழிதலுண் டென்பதும்,

"காமம் விடுவொன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேனிவ் விரண்டு."

என்னுங் குறளாலும்,

"அளிதோ தானே நாணே......
....
தாங்கு மளவைத் தாங்கிக்
காம நெரிதரக் கைந்நில் லாதே"

என்னுங் குறுந்தொகைச் செய்யுளாலும் அறியப்படும். தலைவி யானவள் உயிரினுஞ் சிறந்த நாணினை அதனினுஞ் சிறந்த கற்பி னாற் கைவிடுதற்கு, மடவரலொருத்தி தனக்கு இன்பமூட்டும் உயிரினுஞ் சிறந்த குழவியைக் கணவன் சொற்பிழையாத கற் பினாற் கைவிட்டமையை உவமை கூறியிருப்பது நினைந்து நினைந் தின்புறற்பாலது.

இவர் பாடிய அகநானூற்றுச் செய்யுளின் பொருளாவது: 'தோழி, தலைவனைப் பிரிதலரிய காமத்தால் நீ செய்யற்பாலதனை அறியாயாயினும் யான் உரைப்பதனைக் கேள்; நமது புனத்தி லுள்ள தினைகளிற் பல கதிர்வார்ந்து கொய்தற்கு முன்பே (கிளிகளாற் கவரப்பட்டு) வெறுந் தட்டைகளாகக் காணப்படு

கின்றன; நீ தான், பன்மலர்க் கண்ணி சூடி வேட்ட நாயுடன் மலைதொறுஞ் செல்லும் வெற்பனைப் பெறும் முயற்சியளவில் அமைந்தனை: இனி நீ நின மாலை அசையுமாறு எழுந்தெழுந்து கிளிகளை யோட்டும் ஓசையை அவற்றின் பேச்சுக் கிடையிடையே பலகாற் சொல்லி அவ்விடத்து அவ்வாறு ஒழுகாயாயின், அன்னையானவள் 'இவள் கிளி யோட்டுதலை அறியாள்' என்று கருதித் தினையைக் காத்தற்குப் பிறரைக் கொடுவந்து நிறுத்துவளாயின், பின் அவனது மலர்ந்த மார்பு உறுதற்கரி தாகும் என்பது.

இது, தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது ஆம். இதனால் களவுக் கூட்டத்திற்கு உண்டாகும் இடையூறு தலைவற்குக் குறிப்பினாற் புலப்படுத்தி வரைவுகடாவுமாறு காண்க. இச் செய்யுளில் வந்துள்ள,

> "கிள்ளைத் தெள்விளி இடையிடை பயிற்றி
> ஆங்காங் கொழுகா யாயின்"

என்னுஞ் சொற்றொடர் நுண்பொருளுடைத்தாய் இன்பஞ் செய்வ தாகின்றது. தெள்விளியாவது தெளிந்த இசை போலும் ஓசை. கிளியை ஒட்டும் அவ்வோசையை அவற்றின் பேச்சுக் கிடையிடையே சொல்லுதல் என்பது கிளியின் பேச்சும் அதனை யோட்டும் இவளது ஓசையும் ஒரு தன்மையன என்பதும், இவள் ஓட்டும் குரலைக் கேட்ட கிளிகள் இவளைத் தம்மின மெனக் கருதி மீட்டும் போந்து கதிர்களைக் கவராநிற்கும் என்பதும் பெறவைத்த படியாம். கிளியோட்டும் கொடிச்சியின் குரலைக் கிளியின் குரலெனக் கருதி ஏனைக் கிளிகளும் தினையின் கட் போதரும் ஆகலின், தமர் காவலை விலக்குவர் போலும்; ஆகலின் மால்வரை நாட, தாழ்க்காது இவளை வரைந்து கொள் வாயாக.—என்னும் பொருளமைத்து ஐங்குறுநூற்றிற் கபிலர் பாடிய,

> "கொடிச்சி யின்குரல் கிளிசெத் தடுக்கத்துப்
> பைங்குர லேனற் படர்தருங் கிளியெனக்
> காவலுங் கடியுநர் போல்வர்
> மால்வரை நாட வரைந்தனை கொண்மோ"

என்னுஞ் செய்யுள் ஈண்டு ஒப்புநோக்கி இன்புறற் பாலது. 'ஆங்காங்கு ஒழுகாயாயின்' என்றது நின்னாற் கிளிகள் கடியப் படாவாயினும், ஓட்டுதல்போன்று ஒழுகாயாயின் என்றபடியாம்.

இவர் பாடிய புறப்பாட்டு,

"படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்தாம் வாழு நாளே"

என்பது.

இதில், படைக்கப்படுஞ் செல்வம் பலவற்றையும் படைத்த துடன், பலரோடு கூட உண்டலையும் செல்வர்க்கு இலக்கண மாக இவர் கூறியது சிந்திக்கற்பாலது. "உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா மடமை" என்று பொய்யில்புலவரும் கூறியுள்ளாரன்றே? ஔவையாரும் "சிறுசோற்றானும் நனி பல கலத்தன்; பெருஞ் சோற்றானும் நனிபல கலத்தன்" என அதியமான் அஞ்சியைப் பாராட்டியுள்ளமை காண்க. "இடைப் படக் குறுகுறு நடந்து........மயக்குறு மக்களை" என்னும் பகுதியில் சிறுமகார் இயல்பும், அதனால் அவர் பெற்றோரை இன்பத்தில் மயங்கச்செய்யுமாறும் கூறியிருப்பது கழிபே ருவகை விளைப்பதாம் "அமிழ்தினுமாற்ற" என்னுங் குற ளுரையில், பரிமேலழகரும் 'சிறுகையான் அளாவலாவது இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும் நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தல்' என்று இச்செய்யுட் பகுதியை எடுத் தாண்டு இதன் சிறப்பைப் புலப்படுப்பாராயினர். "மக் களை........வாழு நாளே" என்பதன் கருத்து இல்வாழ்வார் எய் தும் இருமை யின்பத்திற்கும் நன்மக்கட்பேறு இன்றியமையாத தாம் என்பது. பலரோடுண்டலாகிய ஈகையாற் புகழுண்டா மாதலின், அஃதும் அகபபட இப்பாட்டின் பொருளை மேற் கொண்டு "பொன்னுடையரேனும......தவர்" எனப் புகழேந் தியார் பாடியிருக்குந் திறன் புகழ்ச்சிக் குரியது.

"இம்மை யுலகத் திசையொடும் விளங்கி
மறுமை யுலகமும் மறுவின் றெய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்மலோர் எனப்
பல்லோ ருரைத்த பழமொழி யெல்லாம்
வாயே யாகுதல் வாய்த்தனம் தோழி."

என்னும் அகப்பாட்டின் பகுதியும் இதனுடன் அறிந்து மகி ழற்குரியது.

நிலவு

நெடுவெண் ணிலவே! நெடுவெண் ணிலவே!
வடிவில் விளங்கும் நெடுவெண் ணிலவே!
மீனலர் பூத்த வான்பொழில் நடுவண்
கானமர் தென்றற் காலசைந் துலவ
பானில வெறித்துப் பளிங்கென விளங்கி
மனக்கவ லின்றி மகிழ்ந்தினி தாடி
எமக்குந் தமிழ்போல் இன்பம் பயப்பை
வாய்ந்த இன்பால் மகிழ்ந்த பின்னுள்
தேய்ந்து தேய்ந்து சிறுத்துக் கூனி
மாய்ந்து மறைவை; வருந்தும் எம் மனம்.
இளைஞர் மகிழ, முதியர் மகிழ,
அறிஞர் மகிழ, வறிஞர் மகிழ,
இல்லார் மகிழச், செல்வர் மகிழ
விண்ணி லுறைந்து விளங்கும் நீயும்
மண்ணி லுறையும் மாந்தர் போலப்
பிறந்து விளங்குவை; பின்னர்
இறந்து மறைவை அளித்திவ் வுலகே.

—வித்துவான் பே. கோவிந்தன்.

பாணர்

[பண்டித ஞா. தேவநேயப் பாவாணர்]

தமிழ் நாட்டில் உள்ள தமிழ் அல்லது திராவிடக் குலங்களுள் பாணர் குலமும் ஒன்று. இது மிகப் பழைமையான தென்பது தொல்காப்பியத்தா லறியப்படும்.

பாணர் பாணைத் தொழிலாகக் கொண்டவர். பாண் என்பது பாட்டு. பண், பாண், பாடு, பா என்பவை ஓரினச் சொற்கள். சீவகசிந்தாமணியில் பாணியாழ் (செ. 1500), பாண்வலை (செ. 2040), பாணுவண்டு (செ. 2447) என்னும் தொடர்மொழிகளில் பாண் என்னும் சொல் பாட்டு என்னும் பொருளில் வந்துள்ளது. சிலப்பதிகாரத்தும் (ப. 349) பாண்-பாட்டு என்று அடியார்க்கு நல்லார் கூறியுள்ளார்.

"பாணருளும் இசைப்பாணரும், யாழ்ப்பாணரும், மண்டைப்பாணருமெனப் பலராம்" என்று (தொல். புறம். சூ. 36உ) நச்சினார்க்கினியர் கூறுவர். இசைக்கருவிகள்: தோற்கருவி, துளைக்கருவி, நரப்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக் கருவி என ஐவகையாகக் கூறப்படும். இவற்றுள், மிடறு (தொண்டை) என்பது இயல்பான வாய்ப்பாட்டாதலின் இதனை நீக்கி ஏனைய நான்கையுமே கருவியெனக் கூறுவர் சிலர். இந்நான்கனுள் கஞ்சம் (வெண்கலம்) தாளக்கருவி. இது முதலிற் கருவிபற்றி வெண்கலத்தாற் செய்யப்பட்டதையும், பின்பு இனவிலக்கணத்தாற் பிறவற்றினால் செய்யப்பட்டவற்றையும் குறிக்கும். தாளக் கருவியின்றியும் தாளம் காக்கப்படுமாதலானும், ஒரு தாளக் கருவியும் தனித்து இன்பம் தராமையானும் அது முக்கியமானதன்று. மேற்கூறிய பிரிவாருள் இசைப்பாணர் வாய்ப்பாடகரும், யாழ்ப்பாணர் நரம்புக்கருவியினரும், மண்டைப்பாணர் தோற்கருவியினருமாவர். துளைக் கருவி இயக்கும் குழற்பாணர் மண்டைப்பாணருள் அடங்குவர். மண்டை-பறை குழலோடுகூடிப் பறையடிப்பதே பெருவழக்கு. இனி, நச்சினார்க்கினியர் பாணரை மூவகையர் என்னாது பலர் என்றதால், அதனுட் குழற்பாணரை அடக்கினும் அமையும். சிலப்பதிகாரத்தில்,

"குழலினும் யாழினுங் குரல்முத லேழும்
வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டும்
அரும்பெறன் மரபிற் பெரும்பா ணிருக்கையும்"

(இந்திரவிழா. அ. 35-38) என்று இளங்கோவடிகளும் 'பெரும் பாண்—குழலர் முதலோர்' (ப. 139) என அரும்பதவுரை காரரும் கூறியிருப்பதால் குழற்பாணருமிருந்தனரென அறிக. குழலைப் பறையின்றித் தனித்து வாசிப்பதின்மையின், குழற் பாணர் பிரித்துக் கூறப்பட்டிலர்.

ஆகவே, இசைத்தொழில் முழுமையுங்கொண்டு இக் காலத்து மேளகாரர் போல இருந்தவர் பாணர் என்பது பெறப்படும். 'பாண்சேரிப் பற்கிளக்கு மாறு' என்னும் பண்டைப் பழமொழியும் இதனை வற்புறுத்தும். திருவிளை யாடற் புராணத்திற் பாண்டியன் இசைப்புலவராகக் கூறப்படும் பாணபத்திரரும், திருஞானசம்பந்தர் தேவாரப் பதிகங்கட்கு யாழ் வாசித்த திருநீலகண்ட யாழ்ப்பாணரும், பன்னீராழ் வாருள் ஒருவரும் யாழறிஞருமான திருப்பாணாழ்வாரும் பாணர் குலத்தவரே. பாணருள் ஆடவன் (புருடன்) பாணன் என்றும், பெண்டு பாடினி, பாணிச்சி, பாட்டி, விறலி என்றுங் கூறப்படுவர்.

வேளாளர் குலம் வேளாண் என்றும், சமணர் நெறி சமண் என்றும் கூறப்படுதல் போல, பாணர் குலமும் பாண் என்று கூறப்படுவதுண்டு. புறப்பொருள்வெண்பா மாலையில் "கிளை பாய்ந்து பண்ணிய கேள்வி யாழ்ப்பாணும்." (சூ. 144) "அங்கட்கிணையன் துடியன் விறலிபாண்" (சூ. 16) "பாண் பாட்டு," (சூ 137), "பாண் கடனிறுக்கும்" (புறம் 203) என வந்திருத்தல் காண்க.

பாணருக்குச் சென்னியர், வயிரியர், செயிரியர், மதங்கர், இசைகாரர், பண்ணவர், பண்டவர் (பண்டர்), ஓவர், அம்பண வர் முதலிய பிற பெயர்களுமுண்டு. இவற்றுள் பண்டர், ஓவர் என்பன பாணருட் கீழ்மக்களைக் குறிக்குமென்று பிங்கல நிகண்டு கூறும். மதங்கன், அம்பணவன் என்னும் ஆண்பாற் பெயர்கட்கு மதங்கி, அம்பணத்தி என்பன முறையே பெண் பாற் பெயர்களாகும். அம்பணம் - யாழ். அம்பணவன் - யாழ் வாசிப்போன்.

'அரும்பெறன் மரபிற் பெரும்பா ணிருக்கையும்' என்று சிலப்பதிகாரத்தும், 'பெரும்பாணிருக்கையும்' என்று மது ரைக் காஞ்சியினும், (அ. 942) 'அருட்பெரும் பாணனாரை' என்று திருநீலகண்ட யாழ்ப்பாணர் புராணத்தும் (செய், 3), சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை எனப் பத்துப் பாட்டினும் வந்திருப்பதுகொண்டு, சிறுபாணர் பெரும்பாணர்

எனப் பாணர் இருபெரும் பிரிவினரோ என்று ஐயுறவும் இட முண்டு.

பத்துப்பாட்டு முகவுரையில், "மேலைப்பாட்டும் (சிறு பாணாற்றுப்படையும்) இதுவும் (பெரும்பாணாற்றுப்படையும்) பாணராற்றுப்படையா யிருப்பினும், அடிவரையறையிற் சிறிதும் பெரிதுமாயிருத்தல்பற்றி அது சிறுபாணாற்றுப்படை யெனவும் இது பெரும்பாணாற்றுப்படை யெனவும் பெயர் பெற்றன" என டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள், எழுதியிருப்பது தெளிவானதேயாயினும், பெரும்பாண், பெரும்பாணர் என்று நூல்களில் வழங்குவதானும், சிறு பாணாற்றுப்படையில்,

"பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
இன்குரற் சீறியாழ் இடவயின் தழீஇ"

எனச் சுருக்கமாகவும் சீறியாழ் (சிறு+யாழ்) என்னும் பெய ருடனும், பெரும்பாணாற்றுப்படையில், பச்சை, துளை, போர்வை, வாய், கவைக்கடை, திவவு, மருப்பு, நரம்பு முதலிய உறுப்புக்களை யுடையதாக விரிவாகப் பதினாறடிகளினும் யாழ் கூறப்படுதலானும், சிறுபாண் பெரும்பாண் என்பவை கருவி பற்றிய குலப்பிரிவோ என்னும் ஐயம் முற்றும் அகன்ற பாடில்லை. பல்கலைக்கழக அகராதியினும் பெரும்பாணர் பாண ருள் ஒரு பிரிவினர் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

பாணர் வாய்ப்பாட்டும் கருவியுமாகிய இருவகை இசையி னும் வல்லவராயிருந்தனர். சிலப்பதிகாரத்திலுள்ள 'பாடற் பாணர்' (அந்தி. அ. 186), 'குரல் வாய்ப்பாணர்' (அந்தி. அ. 200) என்னுந் தொடர்கள் வாய்ப்பாடகரைக் குறிக்கும்.

கருவிகளில் தோற்கருவிகளெல்லாம் பறை என்னும் பொதுப் பெயராற் குறிக்கப்படும். தொல்காப்பியத்தில்,

"தெய்வம் உணாவே மாமரம் புள் பறை" என்னும் கருப் பொருட் சூத்திரத்துள்ளும்,

"அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை"

என்னும் திருக்குறளினும் பறை என்பது தோற்கருவிப் பொதுப்பெயராயுள்ளமை காண்க. 'மணப்பறை', 'பிணப் பறை', 'பறை சாற்றினன்' முதலிய வழக்குகளில் பறை என் பது பல்வேறு தோற்கருவிகளைக் குறித்தது. பறைகளை அடிப் பவர் பறையர் எனப்பட்டனர். இப்பெயர் இக்காலத்துப்

பிணப்பறை யறைபவரைமட்டுங் குறிக்கின்றது. பண்டைக் காலத்தில் மண்டை என்னும்பெயர் பறைக்கு வழங்கிவந்த மறுபெயராகும். பறைகளடிக்கும் பாணர் மண்டைப்பாணர் எனப்பட்டனர். மண்டையோடு போன்று மண், மரம், பித்தளை முதலியவற்றாற் செய்து தோற்கட்டிய பறைகளை மண்டை யென்றது ஒருவகை உவமையாகுபெயர். மண்டை யென்பது இக்காலத்தில் மொந்தையென்று திரிந்து அவ்வடிவா யுள்ள மட்கலயத்தைக் குறிக்கின்றது. தவலை என்பதின் மறு வடிவாகிய தபேலா என்னும் இந்துஸ்தானிச்சொல் ஒரு நீர்ப் பாத்திரத்தையும் ஓர் பறையையும் குறித்தல் காண்க. கோயில் மேளத்தைக் குறிக்கும் தவல் (தவுல்) என்னும் பெயரும் இதன் திரிபுபோலும்.

பல்வகைப் பறைகளையும் அடித்துக்கொண்டு ஒரே குல மாயிருந்த மண்டைப்பாணர் பிற்காலத்துத் தொழில், கருவி, ஒழுக்கம் முதலியவற்றின் வேறுபட்டால் பல்வேறுபிரிவாய்ப் பிரிந்து போயினர்.

“துடியன் பாணன் பறையன் கடம்பனென்
றிந்நான் கல்லது குடியு மில்லை”
—புறநானூறு (செய். 335)

என, மாங்குடிகிழார் தொழிற் குடிமக்களை நால்வகைப்படுத் துக் கூறியுள்ளனர். துடி-உடுக்கு.

பாட்டிற்குக் கூத்து துணைத்தொழிலாதலின், பாணர் கூத் தும் ஆடிவந்தனர். வயிரியர், செயிரியர், மதங்கர் என்னும் பெயர்களும், விறலி என்னும் பெண்பாற்பெயரும் கூத்துப் பற்றியவே. கூத்தரைக் குறிக்கும் கண்ணுளர், கண்ணுளாளர் என்னும் பெயர்களும் பாணர்க்குரியன. கண்ணுள் என்பது கண்ணை உள்ளே வைத்தாற்போல் நுணுகிநோக்கும் நுண் வினைக்கூத்து. சிலப்பதிகாரத்தில் (ப. 169.) “கண்ணுளாளர் —மதங்கர், ஆவார் பெரும்பாணர்” என்று அடியார்க்கு நல்லார் கூறியிருப்பதை நோக்குக. விறலி என்பவள் விறல்பட ஆடுபவள். விறலாவது மனத்தின் இயல்பு புறத்தே தோன்றச் செய்யும் திறம். இது வடமொழியிற் சத்துவம் எனப்படும். கணவன் பாணனும் மனைவி விறலியுமாயிருந்து இருவரும் இசைந்து அரசரிடம் சென்று பாடியாடுவது பெருவழக்கு.

பாணர்க்குச் சிறுபான்மை தையல் தொழிலுமுண்டு. சிலப்பதிகாரத்தில் (இந்திர விழா. அ. 32) துன்னகாரர் என்னும் பெயர்க்குப் பாணர் என்று பொருள் கூறியுள்ளார் அரும்பதவுரைகாரர். துன்னம்—தையல்.

"பாணர்க்குச் சொல்லுவதும் ....தை........" என்று காளமேகரும் பாடியுள்ளார்.

பாணர்க்குரியது பெரும்பாலும் இசைத் தொழிலாதலின், பல்வகைப் பறைகட்கும் (அல்லது மேளங்கட்கும்) தோற் கட்டுதல் அவர் வினையே என்பது சொல்லாமே விளங்கும்.

இசைத்தொழில் பாணரெல்லார்க்கும் எக்காலத்தும் இசையாமையின், அவருள் ஒருசாரார் மீன் பிடிப்பதைத் தொழிலாகக் கொண்டனர்.

"பச்சூன் பெய்த சுவல்பிணி பைந்தோல்
கோள்வல் பாண்மகன் தலைவலித் தியாத்த
நெடுங்கழைத் தூண்டில் நடுங்க நாண்கொளீஇக்
கொடுவாய் இரும்பின் மடிதலை புலம்பப்
பொதியிரை கதுவிய போழ்வாய் வாளை"

என்று பெரும்பாணாற்றுப் படையிலும், "மீன்சீவும் பாண்சேரி" என்று மதுரைக்காஞ்சியிலும், கூறியிருத்தல் காண்க.

பாணரென்பார் குலமுறைப்படி (இன்று ஆதிதிராவிடர் என்று அழைக்கப்படுவாருள் ஒரு சாராராகிய) பறையரே யாவர். இஃது அவருடைய பறையடிக்குந் தொழிலாலும், தலைவி தான் தன் தலைவன்மேற் சினந்திருக்கும்போது அது தணிக்கவந்த யாழ்ப்பாணனை நோக்கி, "புலையாத்தின்னி போந்ததுவே" (திருக்கோவை. செ. 386) என்று வெகுண் டுரைப்பதில், பாணர் ஆவின் (பசுவின்) இறைச்சியை உண்பதாகக் குறித்திருத்தலாலும், அதற்குப் பாணன் புலந்துரைப்பதில் (செ. 387),

"வில்லாண் டிலங்கு புருவம் நெரியச்செவ் வாய்துடிப்பக்
கல்லாண் டெடேல்கருங் கண்சிவப் பாற்று கறுப்பதன்று
பல்லாண் டடியேன் அடிவலங் கொள்வன் பணிமொழியே"

என்று தன்னை மிகவும் தாழ்த்திருப்பதாலும் அறியப்படும்.

காலஞ்சென்ற M. சீனிவாச ஐயங்கார் அவர்களும் தமது ஆராய்ச்சிநூலில் பாணர் பறையருள் ஒரு பிரிவினர் என்று குறிப்பிட்டுள்ளனர்.

பாணர் இங்ஙனம் தாழ்ந்த வகுப்பினராயிருந்தும், முத்தமிழுள் இசை, நாடகம் என்னும் இரண்டையும் வளர்ப்ப வர் அவராதலாலும், இசையில் (சங்கீதத்தில்) தமிழர்க்கும் தமிழரசர்க்கும் இருந்த பேரார்வத்தினாலும், ஆரிய வொழுக்

கம் ஆழ வேரூன்றாத பண்டைக்காலத்தில் குலப்பிரிவினை பிற் காலத்திற்போல் அவ்வளவு முறுகாமையானும் அவர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பும் அரசர் அவைக்களங்களிலும் அரசியர் அந்தப்புரங்களிலும் தடையில்லா நுழைவும் இருந்தன. அறிவாற் சிறப்பேயன்றிப் பிறப்பாற் சிறப்பு அக்காலத்தில் இருந்திலது.

அரசரைப் "பாணர் ஒக்கல்" என்று திருக்கோவை (செ. 400) கூறும்; ஒக்கல்-இனம்.

"குரல்வாய்ப் பாணரொடு திரிதருமரபின் கோவலன் போல", "பாடும் பாணரிற் பாங்குறச் சேர்ந்து" என்று பெருஞ் செல்வனும் பெருங்குடி வணிகனுமான கோவலன் பாணரொடு கூடித்திரிந்தமை சிலப்பதிகாரங் கூறும்.

உறையூர் முதுகண்ணன் சாத்தனார் சோழன் நலங்கிள்ளி யைப் பாடிய புறப்பாட்டில், "பாண்சுற்றம் சூழ்வதாக நினது நாட்காலத்து மகிழ்ந்திருக்கும் ஓலக்கம்" (Durbar) (செ. 29 உரை) என்று கூறியுள்ளார்.

பாணர் அரசரிடம் சென்று பாடி யாழ் வாசித்து அவர்க்கு இன்பமூட்டுவதும், அவர்மீது அரசியர்க்குள்ள ஊடலை (கோபத்தை)த் தணிப்பதும், அரசருடன் போர்க்களத் திற்குச் சென்று வெற்றிநேர்ந்தவிடத்து வெற்றிக் கூத்தாடுவ தும் இறந்துபட்ட அரசர்க்கும் வீரர்க்கும் இரங்கிப் பாடுவதும், அவரை நினைவுகூர்தற்கும் வழிபடுதற்கும் நாட்டிய நடுகற்களை வணங்கிச் செல்வதும் வழக்கம்.

அரசரும் விடிந்தெழுந்தபின் பாணரை வருவித்து, அவர்க் குச் சிறந்த பரிசிலளிப்பதும், அவரை இனத்தாருடன் உண்பிப் பதும், போர்க்களத்து வருவாய்களைப் போர்செய்து வெற்றி பெற்ற பின்பும், பகைவர் செல்வங்களை (வெற்றியுறுதிபற்றி)ப் போர்செய்யப்போகு முன்பும் அவர்க்கு உரிமையாக்குவதும் வழக்கம்.

> "வரையா வாயிற் செறாஅ திருந்து
> பாணர் வருக பாட்டியர் வருக
> ....வயிரியர் வருகென
> இருங்கிளை புரக்கும் இரவலர்க் கெல்லாம்
> கொடிஞ்சி நெடுந்தேர் களிற்றொடும் வீசி"

என்று மதுரைக்காஞ்சியில், (அ. 748—52) தலையாலங்கா னத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் விடியற்காலத்துப் பாணரை வருவித்துப் பரிசளித்தமை கூறப்பட்டது.

"பொறிமயிர் வாரணம் பொழுதறிந் தியம்பப்
பொய்கைப் பூமுகை மலரப் பாணர்
கைவல் சீறியாழ் கடனறிந் தியக்க
இரவுப் புறம்பெற்ற ஏம வைகறை
....
வரிசையின் இறுத்த வாய்மொழி வஞ்சன்"

என்று புறப்பாட்டில் (செ. 398) சேரமான் வஞ்சன் அரண்மனையில் வைகறை (விடியல்) தோறும் பாணர் யாழ்வாசித்தல் கூறப்பட்டது. வாரணம்—கோழி.

"பாணன் கூத்தன் விறலி.........
....
தொன்னெறி மரபிற் கற்பிற் குரியர்"

என்று தொல்காப்பியத்தில் (செய்யுளியல், சூ. 182) பாணர் அரசியரிடம் அவர்க்கு அவர்தம் கணவர் மீதுள்ள ஊடலை அல்லது புலவியைப் போக்குதல் கூறப்பட்டது. ஊடல் முதிர்ந்தது புலவி.

புறப்பொருள் வெண்பாமாலையில், 144-ஆம் சூத்திரத்தில், பாணர் போர்க்களத்தில் வீரருடன் தேரின் பின்னின்று ஆடுவதும், 207-ஆம் சூத்திரத்தில் அவர் போர்க்களத்திற்பெற்ற பரிசிலைப்புகழ்ந்து கூறுவதும், 137-ஆம் சூத்திரத்தில் அவர் போரில் இறந்த வீரர்க்கு இரங்கி விளரிப்பண் பாடுவதும், 252-ஆம் சூத்திரத்தில், அவர் இறந்த வீரர்க்கு எடுத்த நடுகல்லைத் தொழுவதும் கூறப்பட்டன.

அரசர் பாணர்க்குப் புலவுச்சோறு, இனிய மது, பொன்னரிமாலை, வெள்ளி நாராற்றொடுத்த பொற்றாமரைப்பூ, களிறு, குதிரை பூட்டியதேர் முதலியவற்றை நிரம்பக் கொடுத்ததாகப் புறநானூற்றிற் பல பாடல்களுள. இவற்றுள், பொன்னரி மாலையை விறலி என்னும் பாணிச்சிக்கும் பொற்றாமரைப் பூவைப் பாணனுக்கும் சூட்டுவது வழக்கம்.

"முட்டில் பாணரும் ஆடியன் மகளிரும்
எட்டொடு புணர்ந்த ஆயிரம் பொன்பெறுப"

என்பதால் (சிலப் ப. 121), மாதவி பெற்றது போலப் பாணரும் தம் திறமைக்கு 1008 கழஞ்சு பொன் பெறும் வழக்கமிருந்ததாகத் தெரிகின்றது.

11-ஆம் புறப்பாட்டில், பாடினிக்குச் சிறந்த பொன்னணி கலத்தையும், பாணனுக்கு வெள்ளி நாராற்றொடுத்த பொற்று

மரைப் பூவையும், சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோ அளித்ததாகக் கூறப்பட்டுள்ளது.

126-ஆம் புறப்பாட்டில், மலையமான் திருமுடிக்காரி பகைவருடைய யானையினது (நெற்றிப்) பட்டத்திற் பொன்னைக் கொண்டுசெய்த வாடாத பொற்றாமரைப்பூவைப் பாணரது தலைபொலியச் சூட்டியதும், 203-ஆம் புறப்பாட்டில், சேரமான் பாமுளூரெறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி பாணர்க்குப் பகைவர் அரண்களைப் போர்செய்து அழிக்கு முன்பே கொடுத்ததும் கூறப்பட்டன.

பாணர் இங்ஙனம் பல அரசரிடம் சிறப்புப்பெற்றனரேனும், பொதுவாக வறுமையால் வருந்தினரென்றும், வள்ளல்களைத் தேடி மலையுங்காடும் அலைந்து திரிந்தனரென்றும், கி. மு. 1000-ஆண்டிற்குக் குறையாத தொல்காப்பியமே கூறுகின்றது.

> "கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
> ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
> பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
> சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்"

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தில் (புறம்- சூ. 36) பாணர் வறுமையும், அவருள் ஒருவர் தாம் பரிசுபெற்ற வள்ளலிடம் அதுபெறாத பிறரை ஏவி ஆற்றுப்படுப்பதும் கூறப்பட்டன. சங்கநூல்களிலும் தனிப்பாடல்களிலும் பாணராற்றுப் படைக்கு உதாரணங்கள் நிரம்பவுள.

இங்ஙனம் பண்டைக்காலத்தே பாணர்க்கு வறுமைதோன்றியதற்கும், அது பின்பு முற்றிப் பிணப்பறை தவிரப் பிற வழிகளிற் பாண்டொழில் நடத்தவிடாது கெடுத்தமைக்கும் காரணம் ஆரிய வர்ணாச்சிரமத்தால் பாணர் தாழ்த்தப்பட்டதும் ஆரியர் தமிழ் இசையைப் பயின்றதுமே.

(தொடரும்)

நகைப் பகுதி:

என் நண்பன் சின்னப்பன்

(மகிழ்நன்)

எனது நல்ல நண்பன் சின்னப்பன் ஓயாது வெற்றிலை பாக்குப் போட்டுக் கொள்கிறவன். காலையில் எழுந்ததிலிருந்து, இரவு தூங்கும் வரையில் எத்தனை முறை பாக்கு வெற்றிலை போட்டுக் கொள்கின்றானென்று ஒருவராலுஞ் சொல்ல முடியாது. வேலையின்றி வீட்டிலிருக்கும நாளில், ஒரு பாயி லமர்ந்து அவன் வெற்றிலை பாக்குப் போடுவதைப் பார்த்தால், அகன்ற இவ் வையகத்தில் அவனை விட அமைதி பெற்றவர் ஒருவருமிலர் என்று திண்ணமாய்ச் சொல்லிவிடலாம். ஒரு விடுமுறை நாளில் அவனைப் பார்க்கச் சென்ற நான், வழக்கம் போல் அவன் வாய் நிறைய வெற்றிலை பாக்கை வைத்துக் கொண்டு மேலும் போடத் தொடங்குவதைக் கண்டு, "சின்னப்பா! ஓயாது இந்த வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டிருக்கிறாயே இந்த இழவை ஒழித்து விடலாகாதா?" என்றேன். "உனக்கு நான் சின்னப்பா என்பதைக்கூட மறந்து பேசுகிறாய். நீயா எனக்கு அறிவு புகட்டுவது? நன்றாயிருக் கிறது நியாயம்! இந்தக் காலத்துப் பிள்ளைகளுடைய அறிவு செல்லும் வழி மிக வியப்பாயிருக்கிறது!" என்று, என்னை நோக்கிப் பேசாது, கையிலுள்ள வெற்றிலையில் சுண்ணாம்பு தடவிக்கொண்டு, அதன்மேற் கண் வைத்தவனாய்ச் சொன்னான். அவனுடைய மனம் போன போக்கை நான் கண்டு, "ஓகோ, அப்படியா? நல்லது. அடே சின்னப்பா, சின்னப்பையா, தழை தின்கின்ற வெள்ளாடே, தின்பதை முதலிற் கன்னத்தி லடக்கும் குரங்கே, என்னிடத்திலா உன் திறமையைக் காட்டப் போகிறாய்? சரி, பார்க்கலாம் ஒரு கை," என்றேன்.

இதற்குள், அடுப்பங்கரையிலிருந்த சின்னப்பன் மனைவி தையல் நாயகம், எனது குரலைக் கேட்டு வெளியே வந்தாள். நான் அவளைப் பார்த்து, "கேட்டாயா, தையல்? வெற்றிலை பாக்குப் போடுவதை நிறுத்தலாகாதா? என்று இவனை நான் கேட்டதற்கு, 'நான் உன் சிற்றப்பனாயிற்றே; எனக்கா நீ புத்தி சொல்வது?' என்கின்றான். பார்த்தாயா, அவனுக்குப் பிடித் திருக்கிற கொழுப்பை?" என்றேன்.

சின்னப்பன் : (என்னை நோக்கி) "அடே, ஆண்மை கெட்ட அருச்சுனா, 'வா, ஒரு கை பார்க்கலாம்' என்று என்னோடு பேசி விட்டு, அவளைப் போய்த் துணைக்கு அழைக்கிறாயே. உனக்கு வெட்க மென்பதே இல்லை. இந்தப் பாக்கு வெற்றிலை என்ற மட்டில், அவள் யாரோடுஞ் சேர்ந்து என்மீது சண்டைக்கு வருவாளே."

தையல்: "ஐயோ, பாவம்! வெற்றிலை பாக்கைக் கண்டிக்கிறே னென்று மிகவும் வருந்துகிறார். நான் இன்று உங்களுக்குத் துணையாய் நின்று பேசட்டுமா?"

சின்னப்பன் : "பேசவேண்டும். ஆனால் நீ பேசமாட்டாய் நீ ஒரு நன்றி கெட்ட நாய்"

நான்: "நாயா? அப்படிச் சொல்வது நீயா, நாயா?

சின்னப்பன் : (வலது கை நகங்களால் தலையைக் கீறிக்கொண்டு கண்ணை மூடி) "ஒருபிழை நேர்ந்து விட்டது. பெண்பால் நினைவுக்கு வராததனால் நாய் என்று சொல்லிவிட்டேன். தையல்! நான் பிழைசெய்து விட்டேன், பொறுக்க வேண்டும். திருத்தமாகச் சொல்லுகிறேன் கேள். தையல் நாய் அகமே, தையல் நாய்ச்சியே, தையல் நாச்சியாரே நன்றி கெட்ட நாய்ச்சியாரே......." என்று இராகம் பாடலானான். எனக்குச் சிரிப்பு வந்து விட்டது. (இப்படித்தான் சின்னப்பன் எதிர்பாராத வகையில் பேச்சைத் திருப்பி விடுவான்.) தையலும் சிரித்தாள். எங்களுக்கு வந்த நகைப்பை அறியாதவன் போல் சின்னப்பன் வெற்றிலையிற் சுண்ணும்பு தடவலானான். சிறிது நேரங் கழிந்தபின் அவன் எனக்கு நேராகத் திரும்பி, "அப்பா, ஆண்மகனே, இப்பொழுது வா! சண்டைக்கு. நான்கு பேர் வீட்டுக்கு வந்தால் வைப்பது வெற்றிலை பாக்கு; ஒரு பெண்ணை நிச்சயம் செய்ய வேண்டு மென்றால் வெற்றிலை பாக்கு! வெற்றிலை பாக்கில்லாமல் ஒரு சடங்கில்லை; இவள் கலியாணம் வெற்றிலை பாக்கில்லா மலா நிறைவேறியது? பருப்பில்லாமல் கலியாணமா? என்பார்கள். நான் கேட்கிறேன், பாக்கு வெற்றிலை இல்லாமற் கலியாணமா? கலியாணமான ஒரு பெண் பாக்கு வெற்றிலையை இகழ்வது மடமையா? கடமையா? அடே, உன்னைப் போன்ற உன்மத்தருடன் இது பற்றி உரையாடி, உரையாடி நான் களைத்துப் போனேன். பாக்கு வெற்றிலை தாங்கள் போட்டுக் கொள்ளாததால், அதைப் போட்டுக்

கொள்ளுகிறவர்களை விடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்று நினைத்துக் கொண்டு திரியும் கொழுப்புப் பிடித்த கூட்டத்திற் சேர்ந்தவன் நீயும்"

தையல்: "சூடு ஏறுகிறது."

சின்னப்பன்: "சூடு போடுகிறேன் உங்களிருவருக்கும்."

நான்: "சின்னப்பா, தவறாக நான் சொன்னதை நீ பொருள் செய்து கொண்டாய். நான் உயர்ந்தவன் என்ற முறையில் நான் பேசவில்லை."

சின்னப்பன்: "பின் நீ பேசிய சிறந்த முறை யாது?"

நான்: "அது ஒரு வேண்டா வழக்கந்தானே. அதை ஏன் கட்டியழவேண்டும்? என்ற கருத்துடன் நான் பேசினேன்."

சின்னப்பன்: "நல்லது, உணவு, உடை முதலியவற்றில், இது வேண்டியது, இது வேண்டாதது என்று தீர்மானிப் பவர் யார்? நாட்டுப்புறத்து மக்களுக்குக் கம்பங்கூழும், மிளகாயும் வயிற்றை நிரப்பப் போதும். அதையுண்டு அவர்கள் நன்றாகத்தான் இருக்கிறார்கள். சோற்றுடன் பருப்பு, நெய், சாம்பார், தயிர், பொரியல், வறுவல், அவியல், ஊறுகாய், பலகாரம், இவையெல்லாம் வேண் டுமோ? வேண்டியதை மாத்திரந்தான் மக்கள் உண்கின் றார்களோ? நீ உண்கின்றாயோ? மற்றவர்கள் இதைத்தான் செய்யவேண்டும், இதைச் செய்யலாகாது என்று சொல்ல உனக்கு என்ன உரிமை இருக்கிறது?"

சின்னப்பனுக்குச் சிறிது வெகுளி உண்டாயிற்றென்பது எனக்கு நன்கு தெரிந்தது. அவனுக்குப் பதில் என்ன சொல்வ தென்று எனக்கு விளங்கவில்லை. பேச்சை வேறு துறையில் எப்படித் திருப்பலாம் என்று நான் கருதி, "சின்னப்பா, பாக்கு வெற்றிலை என்று சொல்வதா, வெற்றிலை பாக்கு என்று சொல் வதா, எது சரி?" என்றேன்.

தையல்: (என்னை நோக்கி): "அண்ணா? எப்படிச் சொன்னால் என்ன?"

நான்: "சின்னப்பனைப் போன்ற தாம்பூலப் புலவர்கள் அதிலும் ஒரு பொருளை யுணர்ந்திருப்பார்கள்."

தையல்: (கணவனைப் பார்த்து) "அண்ணா சொல்கிறது உண் மையா? உங்களைக் கேலி செய்கிறது போலிருக்கிறது அவர் கேட்கும் கேள்வி."

சின்னப்பன்: "உங்களை என்று சொல்லாதே. தங்களை என்று சொல்லு, தங்கம்."

நான்: "காணக்கிடையாத தங்கம்."

சின்னப்பன்: "காசுக்குதவாத பண்டம்."

தையல்: "நீங்களிருவரும் புலிகளே."

சின்னப்பன்: "தங்கமென்று நான் சொன்னது உண்மை நவிற்சி. காணக்கிடையாத தங்கமென்று இவன் சொன்னது உயர்வு நவிற்சி. உயர்வு நவிற்சியைத் திருத்துவதற்கு நான் ஒரு இழிவு நவிற்சி கூறினேன். வெருள வேண்டா, வெருளவேண்டா."

தையல்: "நீங்கள் இலக்கணப்புலி என்பது தெரியுமே."

நான்: "அதுபோகட்டும். பாக்கு வெற்றிலையா? வெற்றிலை பாக்கா?"

சின்னப்பன்: "பாக்கு வெற்றிலையாவது மில்லை, வெற்றிலை பாக்காவது மில்லை."

நான்: "ஆகா! என்ன அறிவு! என்ன புலமை!"

தையல்: "என்ன திறமை! என்ன நுட்பம்!"

சின்னப்பன்: "உங்களிருவரில் யாருக்கு வியப்பு அதிகமென்று தெரியவில்லை. வியப்பு மேலிட்டு வீங்கி வெடித்துப் போகாதீர். வெற்றிலைகளே, சற்றுப்பொறுங்கள்."

நான்: "நாங்களா, வெற்றிலைகள்?"

தையல்: "நம்மை வாயில் போட்டு மென்று விடுவார் போலும்."

சின்னப்பன்: "வெள்ளை வெற்றிலைகள்."

நான்: "தையல், உன்னைத்தான் அப்படிச் சொல்லுகிறான்."

தையல்: "ஓகோ! என்னைக் காட்டிவிட்டு நீங்கள் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறீர்கள்."

சின்னப்பன்: "நன்றாய்ச் சொன்னாய் நாயகம். நெருக்கடியில் இவனை நம்பலாகாது. இருந்த விடம் தெரியாமல் ஓடிப் போவான்."

நான்: “தையல் வெள்ளையாயிருப்பதால், வெள்ளை வெற்றிலை என்று நீ சொன்னது அவளுக்கு ஒரு வகையில் பொருந்து மென்று நான் நினைத்தேன். நானா ஓடிப்போகிறவன்?”

சின்னப்பன்: “சென்னையில் எங்கே பார்த்தாலும் வெள்ளை வெற்றிலை தான்.”

நான்: “திருப்பித்திருப்பி வெற்றிலை என்கிறாய். உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டது.”

தையல்: “விலங்குபோட வேண்டும்.”

நான்: “ஆம், நன்று சொன்னாய். இரண்டு மூன்று பேரைக் கூப்பிடு.”

சின்னப்பன்: “நீங்களிருவரும் போதுமே.”

நான்: “எப்படி?”

சின்னப்பன்: “வெள்ளை என்பது வெண்மை. வெற்றிலை என்பது வெறுமையிலிருந்து வருவது; வெண்மை என்றால் அறிவின்மை வெறுமை என்பதை விளக்கவேண்டிய தில்லை. நீங்களிருவரும் வெள்ளறிவினர். மக்களா நீங்கள்? விலங்குகள்.”

தமிழின் தற்கால நிலையில் தமிழ் மகளிர் செயற்குரிய பணிகள்

திரு. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை,
தலைமைத் தமிழாசிரியர், போளூர்.

தமிழ்நாட்டில் தமிழ்மொழியின் வளர்ச்சி குறித்துப் பெருங்கிளர்ச்சி தோன்றியிருக்கிறது. தமிழ் பேசும் மக்கள் கூட்டத்தில் "தமிழ் வாழ்க" "தமிழ் வாழ்க" என்னும் வாழ்த்தொலி பெரு முழக்கத்தோடு எழுகின்றது. அரசியற் கூட்டம், சமயக் கூட்டம், சமூகக் கூட்டம் என வரும் பலவகைக்கூட்டங்களிலும் தமிழின் வாழ்த்தொலி கேட்கப்பெறுகின்றது. இதனால், தம தாய்மொழியாகிய தமிழை மறந்துகிடந்த தமிழர்,—தமிழ்மொழியின் வளர்ச்சியின்பால் கருத்தூன்றாதிருந்த தமிழர்,—வேற்றுமொழியின்பால் வேட்கைமிக்குத் தம்மையும், தம் மொழியையும், தம் நாட்டையும் புறக்கணித்து மெலிந்திருந்த தமிழர்,—இப்போது உறக்கத்தினின்று விழித்தெழுந்து விட்டனர் என்பது இனிது விளங்குகின்றது. தமிழ் மொழியின் வளர்ச்சிக்குத் தம் உயிரையும் உதவுதற்குரிய வூக்கம் ஆடவர் பெண்டிர், இளையவர் முதியவர், செல்வர் வறியர், கற்றவர் கல்லாதவர் என்ற யாவர் மாட்டும் கிளர்ந்து மிளிர்கின்றது.

தமிழின் தற்கால நிலையில், வேண்டும் தொண்டுகளை ஆற்றுதற்கு ஆண் பெண் என்ற பால்வேறுபாடு கிடையாது. ஆடவர்தமிழ், பெண்டிர்தமிழ் என்ற வேறுபாடுமில்லை. தமிழ், ஆடவர்க்கு எத்துணை இன்றியமையாததோ, அத்துணைப் பெண்டிர்க்கும் இன்றியமையாதது. "நுண்ணறிவுடையோர் நூலொடுபழகினும், பெண்ணறிவென்பது பெரும்பேதைமைத்தே" எனவெழுந்த இடைக்காலக்கொள்கை, பண்டைய தமிழ்வரலாற்று விளக்கத்தாலும், தற்காலப் புதுக்கோள் வழக்காலும் பொய்படுவதாயிற்று. ஔவையார், காக்கை பாடினியார், மாறோக்கத்து நப்பசலையார், கழார்க்கீரனெயிற்றியார் என்ற புலவர்பெருமாட்டிகளின் தமிழ்ப்பணியாலும், காரைக்காற் பேயார், ஆண்டாள் என்போரின் இடைக்காலத் திருத்தொண்டாலும், தமிழ்ப்பணி யென்பது இருபாலார்க்கும் ஒப்பவுரிமை யுடையதென்பது வெளிப்படுவதாயிற்று. ஆயினும், மகளிர், பிறப்புவகையாலும், உடற்கூற்றாலும் ஆடவரின்

வேறுபடுதல் உண்டு; அதனால், அவர் வாழ்க்கைப் பணியும் வேறுபடுகின்றது. இல்லிருந்து நல்லறம் செய்தற்கண், அகத்தே யிருந்து ஆவனசெய்தல் மகளிர்க்கும், புறத்தே சென்று ஆண்மைப்பணி புரிதல் ஆடவர்க்கும் உளவாயின. அவ்வாற்றால், மொழித்தொண்டும் அவரவர் வாழ்க்கைத் தொழில்முறையால் சிறிது வேறுபாடு எய்தியிருக்கிறது. அது கண்டே, மகளிர் தமிழ்மொழியின் வளர்ச்சிகுறித்துச் செய்வன யாவையென்பதுபற்றி ஆராய்ச்சி நிகழ்வதாயிற்று. அது செய்தலும் அறிவுடையோர்க்கு அமைந்த செய்கையே யென்பது துணிபாயிற்று.

தமிழ் வளர்ச்சி குறித்து வேண்டுவனவற்றை யெண்ணப் புகுவோர், முதற்கண், அதன் தற்காலநிலையினை உணர்தல் வேண்டியவராவர். ஒரு பொருளின் வளர்ச்சி குறித்துத் துணை செய்தல் வேண்டின், அதன் உண்மைநிலையையும் அதன்கண் உளவாகியிருக்கும் குறைபாடுகளையும், அவற்றை நீக்குமாற்றையும், நீக்கியவழி, அஃது இடையூறின்றி வளர்தற்கு வேண்டும் ஆக்கநெறியையும் ஆராயவேண்டியது இன்றியமையாதது. ஒன்றின் வளர்ச்சிநாடி ஒருபணி புரியவேண்டுமென்பது உலகறிய விளங்குமாயின், அதன்பால் குறைகள் உளவாயிருக்கின்றன என்பது அறிஞர் அறிந்ததொன்று. "குறைபாடு உள்ளதற்கன்றே வளர்ச்சி உளதாவது" என்றனர் ஆசிரியர் பேராசிரியர். தமிழின் தற்காலநிலையினை உள்ளபடியே நோக்கின் பலவகைக் குறைகள் நமக்கும் புலனாகின்றன.

நம் தமிழ்நாட்டுக் கல்லூரிகளிலும் (Colleges), உயர்நிலை, நடுநிலைப் பள்ளிகளிலும் (High and Middle Schools) நம் தாய்மொழியாகிய தமிழ்மொழி ஒவ்வொரு தமிழ்மாணவனுக்கும் கட்டாயப் பாடமாக இல்லை. ஒருவர் தம் மனத்தெழும் கருத்துக்களைப் பிறர்க்குத் தெரிவித்தற்கு உறுகருவியாக இருப்பது அவர்தம் தாய்மொழியே யாகும். ஜான் லாக் (John Locke) என்னும் பேராசிரியர், "ஒருவர் எத்துணை மொழி வேண்டினும் கற்கலாம்; எத்துணை மொழிகளை ஒருவர் கற்கிறாரோ அத்துணையும் அவர்க்கு அது நலமே; எனினும், அவர் நாடோறும் ஒழிவின்றிப் பயின்று கசடறக் கற்க வேண்டுவது அவர்தம் தாய்மொழியே யாகும்*" என்று

*"Whatever languages a youngman meddles with, the more he knows the better; that which he should critically study and labour to get a facility, clearness and elegancy to express himself should be his own mother-tongue and to this purpose he should be daily exercised in it."—Thoughts on Education

வற்புறுத்தி யிருக்கின்றனர். இத் தாய்மொழிப் பயிற்சி ஒவ்வொருவருக்கும் நன்கு இருக்கவேண்டுமென்பதை நம் நாட்டுக் கல்வியாளர் உட்கொள்ளாது இருக்கின்றனர். அதனால், நாற்பது மாணவர்கள் படிக்கும் ஒரு வகுப்பில், தாய்மொழியைப் பயில்பவர் அந்நாற்பதின்மரேயாக வேண்டியிருப்ப, இக்காலத்தில் இருபது இருபத்தைந்து மாணவர்களே தாய்மொழியைப் பயில்கின்கிறனர். பிறரெல்லாம் வடமொழி முதலிய பிறமொழிகளைப் பயிலுமுகத்தால் தாய்மொழிப் பயிற்சியைக் கைவிட்டு விடுகின்றனர். ஆனால், இந்நாற்பதின்மரும் ஆங்கிலமொழியை மட்டில் ஒழியாது பயில வேண்டிய கடப்பாட்டினைக் கட்டாயமாகக் கொண்டிருக்கின்றனர். மைக்கேல் வெஸ்டு என்னும் பெரியார் இக்கொடுமையைக்கண்டு, பொறாது, "இந்நாட்டில் ஆங்கில மொழியின்பால் வேட்கைமிகுந்து, மக்கள் தம் தாய்மொழிப் பயிற்சியை இழந்து நிற்பது, தன்பால் உள்ள பொருளெல்லாம் கைக்கொண்டு கடைத்தெருவிற்குச் சென்று, உடுத்தற்கென உயரிய பட்டாடைகளும், பூணற்கெனப் பொலிவு மிக்க பொற்பணிகளும் வாங்கிக்கொண்டு, உணவிற்கென ஒருகாசுமின்றி வெறுங் கையளாய் வரும் குறுமகளொருத்தியின் அறிவில் செயற்கொப்பாகும்"* என நகைச்சுவை தோன்றக் கழறிக் கூறியுள்ளார். இவ்வுண்மையினை அசட்டை செய்யும் கல்வியாளர் ஆங்கில நன்மக்கள் மேற்கொண்டிருக்கும் கல்விமுறையினையும் உணர்கின்றிலர். "பிழையின்றிப பேசுவதும் எழுதுவதும் ஒருவர்க்குப் பெருந்தன்மையும் கேட்டார்ப் பிணிக்கும் தகைமையும் பயக்கின்றன; ஆங்கில மகன் ஒவ்வொருவனுக்கும் அடிக்கடி வேண்டியிருக்கும் மொழி ஆங்கிலமே யாகலின், அதனையே அவன் பலகாலும் பயின்று கசடறக் கற்றல் வேண்டும்†" என்று ஆங்கில மக்கள் மேற்கொண்டிருக்கின்றனர். ஆங்கிலமக்களின் மொழி, நடை உடை, அரசியல் முதலிய எல்லா இயல்களையும் பின்பற்றும் குறிக்கோள் உடையவர்களாய் முயலும் நம் தமிழ் நாட்டவர், அவர் தம் மொழிப்பயிற்சிநெறியைப் பின்பற்றித் தமது மொழியறிவைப் பெறாது நிற்பது பேதைமை யன்றோ? தமிழ் மக்கட்குத் தம் தாய்மொழியாகிய தமிழே உயிர்நிலையாதலின், ஒவ்வொரு மாணவனுக்கும்—அவன் கல்லூரி மாணவனாயினும், கலாசாலை மாணவனாயினும்—தமிழ்ப்பயிற்சி கட்டாயமாக இல்லாமலிருப்பது முதற் குறையாகும்.

---

* "Teaching of Mother-tongue"—Macna's Secondary Education. † Thoughts on Education—John Locke.

கல்விகற்போர் தம் தமிழ்மொழியைப் புறக்கணிப்ப தற்கு, அஃது அரசியல்மொழியாக இல்லாமையே காரண மாக இருக்கிறதென்று சிலர் கூறுவதும் பொருத்தமாகவே இருக்கிறது. ஆங்கிலம் கற்றவர்க்கு அரசியலார் அரசியற் றுறையில் மிக்க சலுகை காட்டுகின்றனர். ஆங்கில அறிஞர் மிக்க வேதனமும், சிறப்பும், வரிசையும் பெறுவதால், மக்க ளுக்குத் தாமும் ஆங்கிலம் கற்று அம் மதிப்பும் வரிசையும் பெறவேண்டும் என்று வேட்கையுண்டாதல் இயல்பே. அத னல், கல்வி கற்போரும், கற்பிப்போரும், கல்வியாளரும் ஆங் கிலமொழிப் பயிற்சிக்கே ஏற்றம் கற்பிக்கலாயினர். அரசியல் மொழியும் தமிழ்மொழியாகிவிடின், மக்கட்குத் தம் தமிழ் மொழிப் பயிற்சியில் நாட்டம் உண்டாதல்கூடும். ஏனை அறி வியல், வழக்கு, வானநூல் முதலியனயாவும் தமிழிலே கற்பிக் கப்படினும், அரசியல் மதிப்பிலும் வரிசையிலும் மக்களது ஆர்வம் தணியாமையால், மக்கட்குத் தமிழறிவின்பால் பேருக்கம் தோன்றிற்றிலது. கல்வித்துறையில் உழைப்பவ ருள்ளும் ஆங்கிலம் கற்பிப்பவருக்கே வரிசையும் ஊதியமும் மிகத் தரப்படுதலால், மாணவர்கட்கு ஆங்கிலப் பயிற்சியின் மேல் அவா மிகுந்து தமிழைப் புறக்கணிக்க வழி உண்டா கின்றது கல்வித் துறையிலும், ஆங்கிலமல்லாத பிறமொழி களைக் கற்பிப்பவர்க்குரிய ஊதியத்தைச் சிறிது உயர்த்திய அளவில், தமிழ் வித்துவான் தேர்வுக்குப் பலர் முன்வந்து பயிலத் தொடங்கியிருக்கின்றனர் ஆங்கிலமொழியைக் கற் பிப்பாரை யொப்ப ஏனைமொழிப் புலவர்க்கும் ஊதியமும் வரி சையும் இன்னும் வழங்காதிருத்தலே, கலாசாலை, கல்லூரி மாணவர்கட்கிடையே தமிழின்கண் ஆர்வமும், அம்மொழி யறிவுப்பேற்றுக்குரிய முயற்சியும் அருகியிருத்தற்கு ஏது வாக இருக்கின்றது.

நம் இந்திய நாட்டுள்ளும், வடநாட்டுச் செல்வர்களைப் போலத் தமிழ்நாட்டுச் செல்வர்கட்குத் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கண் போதிய பற்றுக் கிடையாது. அரசியலார் நன்மதிப்பைப் பெறுதற்கும், அவர் வழங்கும் பட்டங்களை அடைதற்கும், தேர்தல்களில் ஈடுபடுதற்கும், இச் செல்வர்கள் செலவிடும் பொருள்களுள் ஒரு பகுதியினைத் தம் மொழி வளர்ச்சிக்காகச் செலவிடவேண்டும் என்ற எண்ணம் இவர் பால் இல்லை. தமிழ்ப்புலவர் நட்புப்பேற்றுக்கும், அப் புல வர் பாடும் புகழைப்பெறுவதற்கும் பெருங்கொடை வழங் கிய செழுந்தமிழ்ச் செல்வர்களின் வழித்தோன்றல்களே இவர்கள்; எனினும், இவர்கள், இக்காலத்துத் தம் பழைமை

நிலையினை மறந்து, தம் முன்னோர் தேடிய புகழ்க்கு மாசு எய்து வித்திருக்கின்றனர். பண்டைநாளைப் பாரிவேள் முதல், இற்றைநாளைப் பாண்டித் துரைசாமி, பெத்தாச்சி வரை இருந்தோர் தமிழ்வளர்ச்சிக்குப் பெருங்கொடை நல்கிய பெருந்தகைகளாவர். வடநாட்டில் வாழ்ந்த ஜம்ஜெட் ஜீஜீபாய், தம் பெயரால் மொழிபெயர்ப்பு நிதியொன்று நிறுவி, தம் தாய்மொழியாகிய கூர்ஜர மொழியில் இல்லாத கலைகளை, ஏனை மொழிகளிலிருந்து மொழிபெயர்த்துத் தம் மொழிவளர்ச்சி பேணிய செயலினை அறியாதார் யார்? இன்றும், இந்திய நாடெங்கும் தமது தாய்மொழியாகிய இந்திமொழியைப் பரப்ப வேண்டுமெனப் பலப்பல செல்வர்கள் பெரும்பொருள் வழங்கி, இந்தி வழங்காத நாடுகளில் இந்திமொழிப் பிரசாரசபைகளை நிறுவி, அதன் வளர்ச்சிக்கு ஆக்கம் தேடுவதை அறியாதார் யார்? தென்தமிழ் நாட்டுச் செட்டி மக்களுள் வேந்தர் பெயர் பெற்ற மேதக்க அண்ணுமலைச் செட்டியாரவர்கள், தென்னுட்டில் கல்வி வளர்ச்சி குறித்துச் சிதம்பரத்தில் தம் பெயரால், நிறுவிய அண்ணுமலைப் பல்கலைக் கழகம், தண்டமிழ் நாட்டுப் பல்கலைக் கழகமேயாகும். ஆகவே, அதன்பால், தாய் மொழியாகிய தமிழ்மொழியன்றோ உயரிய இடமும், வளர்ச்சிக்குரிய ஆக்கமும் பெறுதல் வேண்டும்? ஆனால், அதன், இற்றை நாளைத்தலைவர், திரு. சீனிவாச சாத்திரியார் அவர்கள், "இப் பல்கலைக் கழகம் தமிழ் வளர்ச்சி குறித்து நிறுவிய கழகமென் றற்குரிய விதியொன்றும், இதனை நிறுவுதற் கெழுந்த விதிவகைகளுள் இல்லை"யென்று விளங்கக் கூறியிருக்கின்றனர். தமிழ் நாட்டவர் தம்தாய்மொழி வளர்ச்சிக்கண் நாட்டம் இன்றியிருக்கின்றனர் என்பதற்கு இதனினும் பெரியதொரு சான்று வேண்டாவாம்.

தமிழ்நாட்டவருள் ஆங்கிலப் பெரும்புலமை பெற்று, ஏனைக் கலை யுணர்விலும் சமய வுணர்விலும் நிகரற்ற உலகறி புலமை படைத்தவர் உளர். அவர்தம் புலமையறிவால் புதுப்புதுப் பொருள்களைக் காண்கின்றார்களாயினும், அவற்றைத் தம் தாய்மொழியிலாக்கித் தம் நாட்டவர் உணரல் வேண்டுமென நினைந்தவரல்லர். ஒருசிலர் அவ்வாறு நினையினும், அவர்க்குத் தாய்மொழிப் பயிற்சி இளமையிலேயே விலக்கப் பட்டமையின், தம் தாய்மொழியில் எழுதும் திறமையிலராகியுளர். திறமை இல்வழியும், தமிழறிந்தாரைக் கொண்டு, அவர்கட்குத் தாம் அறிந்தனவும் கண்டனவுமாய அறிவுப்பொருள்களைக் கூறி எழுதுவிக்க நினைக்கவும் இல்லை. இவர்தம் எண்ணமும், மொழியும், செய்கையும் ஆங்கில

மொழிவழியே நிற்றலால், தாய்நாட்டுணர்வும், தாய்மொழிப் பற்றும், தாய் நாட்டவர்பால் அன்பும் இலராயினர். இவர் தம் இரங்கத்தக்க நிலையினைக் கோகலே என்னும் பேரறிஞர் ஒருவர் தாம் எழுதிய நூல் ஒன்றில்,* நம் நாட்டவருட் கற்றார் எனப்படுவோரைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார் :

"ஒருவர் எந்திர நுண்பொருளுண்மைகளை யறிந்து பெரும் புலமை பெற்றிருக்கின்றார் ; ஆயினும், அவர் தம் வீட்டுச் சுவர்க் கடிகாரத்தின் தொங்கட்டானை (Pendulam)ச் செம்மை செய்யமாட்டாது, அதற்குரிய தொழிலாளி யொருவன் உதவியினையே நாடுகின்றார். ஒருவர் ஒலியின் நுட்பங்களையும், அதன் பல்வேறு இயல்களையும் நுனித்துணர்ந்த பெரும்புலவராக இருப்பர் : மற்று, அவர்க்கு இசையின் இன்பவியல் இருளிடைப் பொருளாயுளது. வெப்பத்தின் மிகுதி குறைவால் உலகியற்பொருள் எய்தும் பலவேறு நுட்பங்களையும் ஆராய்ந்தறிந்த புலவர் ஒருவர், நெருப்பு மூட்டும் வகையும், தமக்கு ஒருவேளை யுணவு செய்து கோடற்குரிய திறமையும் இல்லாதவராய் இருக்கின்றனர். நீரின் இயல்நலம் பலவும் கற்றுணர்ந்த புலவராயினும், ஒருவர், தாம் ஒரு நீர்நிலையில் தவறிவிழ நேரில் அதன் கண் மூழ்கி உயிரிழத்தலையே செய்கின்றனர். பலவேறு நீரியற் பொருள் நூல் (ரசாயன சாத்திரம்)களைக் கரிசறக் கற்றவராயினும், ஒருவர், தமது வெள்ளிய உடையிற்பற்றிய மைக் கறையையாதல் தம் மனைவி, தாய் முதலியோரின் விலையுயர்ந்த புடவையிற் பற்றிய எண்ணெய்க் கறையையாதல், அவ்வுடைகட்குத் தீங்கின்றி, நீக்கக் கூடிய மதுகையின்றி மயங்குகின்றனர். தாவர நூற்புலமையில் தமக்குவமையில்லாத தக்கோர் ஒருவர் தமது உடலிற் பற்றிய நஞ்சுக்குரிய பச்சிலைச் செடி இஃது என்றுதல், உடற்குளதாகிய குறைகளை நீக்குதற்குரிய உரிப்பொருள் உடைய கனி, பூ, இலை, வேர், பட்டை இவையென்றுதல் அறியும் அறிவிலராகி யிருக்கின்றனர்."

இக்கூற்றால் நாம் அறியக்கிடப்பது யாதெனில், இவர்தம் கலையறிவு இவர்க்கே பயன்படாது கழிகின்றதென்பது. இவ்வாறு தாமே விரும்பிக்கொண்ட வேற்றுமொழி வாயிலாகப் பெற்ற கலைப்புலமை, தமக்கே பயன்பட்டிலதெனின், தொடக்கத்தே புறக்கணித்த தாய்மொழி வாயிலாக உணர்த்த வேண்டியவழி, அது கைகூடியதென்பது இனிது விளங்குகின்றது. இதனாற்றான், பல கலைகளையும் பயின்று புலமைபெற்ற தமிழ்மக்கள் பேசும் தமிழ்மொழியிற் போதிய கலைநூல்கள் இல்லையாயின.

இனி, தமிழ் கற்பிப்போரும் தமிழறிவு வளர்ச்சிக்குரிய பணியினை நன்கு ஆராய்ந்து செய்வன செய்யாது கைந்நெகிழ்ந்திருக்கின்றனர். இவர், தம்மால் தமிழ் கற்கும் மாணவர்தம் மனவியல் பறிந்து தமிழறிவு கொளுத்துவது இலர். "கொள்

---

* "Practical Education"—G. N. Gokhale

வோன் கொள்வகையறிந்து அவன் உளங்கொளக் கோட்டமில் மனத்தின் நூல் கொடுத்தல் என்ப" என்ற நன்னூற் சூத்திரத்தினை நன்கு மனப்பாடம் செய்தும், பிறர்க்குப் பாடம் சொல்வித்தும், கொள்வோன் கொள்வகை அறிதல், கோட்டமில் மனத்தினராய் நூற்பொருள் கொளுத்தல் என்பவற்றை நினைப்பது கிடையாது. மேனாட்டிலும், அமெரிக்கநாட்டிலும் அறிஞர்கள், கல்விகற்கும் மாணவரது மனவியல்பினை அறிந்து, பல ஆயிரக்கணக்கான நூல்களை யெழுதியும், சொற்பொழிவு செய்தும் வருகின்றனர். காலநிலைக் கேற்ப, மக்கள் மனவியல் வேறுபடுவது கண்டு, அதற்கேற்பச் சிறுவர்க்குக் கல்வி கற்பித்தற்கும் பலவேறு முறைகளைக் கண்டு ஆராய்ந்து வருகின்றனர். நம் தமிழாசிரியர்கள் மாணவர்கட்குக் கற்பிக்கத் தொடங்கும் சின்னூல்கள் யாவும் பெரும்பாலும் கற்போர் மனவியல்பு கண்டு, அதற்கேற்பச் செய்யப் பெற்றனவே யல்ல. தமிழ் கற்பார் முதற்கண் படிக்கத் தொடங்கும் மாலைகளும், அந்தாதிகளும், கலம்பகங்களும், பிறவும் தமிழ் கற்கத் தொடங்குவார்க்கு வேண்டியவை என்று கருதி, அவற்றின் ஆசிரியர்கள் அவற்றைச் செய்யவில்லை; அவர்கள், தமது புலமையின் சிறப்புத்தோன்றவும், பிற நோக்கங்கொண்டும் பாடியனவே. மாணவர் மனப்பயிற்சி குறித்தெழுந்தவை நன்னெறி, மூதுரை என்பனவாய் மிகச் சிலவேயாகும். இலக்கணங்களும், சிறுவர்கட்கு இன்றியமையாது வேண்டப்பெறும் சொற்றொடர் சொற்றொடராக்கம், கட்டுரை யெழுதுதல், பொருளாராய்ச்சி முதலியவற்றைக் குறியாது, நன்னூல் சென்ற முறையினையே அடியொற்றி யெழுதப் பெறுகின்றன. நன்னூலும், அதன் வழி நூல்களும் தோகை வகைவிரி யென்ற முறையும், காரண காரியமுறையும் மேற்கொண்டனவே யொழிய கொள்வோன் கொள்வகையறிந்து கூறும் மனவியல் முறை (Psychological sequence) பற்றி எழுதப்பட்டனவல்ல.

(தொடரும்)

திருத்தணிகேசன் துணை

திருத்தணிகைக் கலிவெண்பா

சீரோங்கு வேற்றடக்கைச் சீமானே ! தென்தணிகை
ஏரோங்கு கோயி லிருப்பானே !—பேரோங்கு
வள்ளிமலை வாழ்வே ! வயலூர்ப் பெருமானே !
வெள்ளிமலை நாதர் விழைந்தறியத்—தெள்ளுபொருள்
சொற்ற குருவே ! சுரகுஞ் சரிதழுவு
நற்றவமே ! எட்டிகுடி நாயகமே !—கற்றவர்கள்
கண்டு விழுங்குங் கனியே ! கடலமுதே !
வண்டுபண் செய்யும் மலர்த்தொடையாய் !—அண்டினருக்
கொன்றைத் தருவாய், மற் றோரிருவர் பாலுகந்தாய்
அன்றுதொழ * மூவர்க் கருள்புரிந்தாய்—நன்றுபுகழ்
சொன்ன ஒரு ‡நால்வர் சுவைப்பாட்டி லேயமர்ந்தாய்
பின்னமற நின்ற பெருமானே !—என்னை
வருத்துமைவர் வல்லாட்டை மாய்த்துமெய்ஞ் ஞான
கருத்தர்சே ராறிதெனக் காட்டித்—திருத்தியுறத்
தக்க நிலைவைப்பாய் † சத்த இருடிகளும்
புக்குப் பணியப் புகலளித்தாய்—மூக்கட்
கரும்பளித்த கண்ணே ! கவினிறைநற் பண்ணே !
சுரும்பமரும் நீபத் தொடையாய் !—விரும்புவரம் !
வேண்ட வெறுதுதவு வேந்தே ! பரங்குன்றில்
வேண்டு மமரர் மிகமகிழ—வேண்டிவரு
தேவர் தலைமகனுந் தேவேந் திரன்மகளை
மூவர் மகிழமண முன்செய்தாய் !—யாவர்க்கும்
தீரதீர சூரைச் செகுப்பதற்குச் செந்தூரில்
வீரவீர வீராதி வீரனாய்த்—தேரமர்ந்த
தேவே ! நஞ் செல்வத் திருவாவி னன்குடியாய் !
சேவேறும் எந்தை செவிக்கினிய—பாவேறு
மந்திரத்தை ஏரகத்தில் வாய்விட் டுரைத்தகுரு !
சுந்தரத்துச் சோதிச் சுடர்ப்பிழம்பே !—‡ எந்தமலை

*திருத்தணிகையில் வீரட்டேசர்கோயில், விஜயராகவப் பெருமாள் கோயில் பிரம்மதீர்த்தம் இதற்குச் சான்று. † திருத்தணிகையில் சப்தருஷிகள் பூசித்தனர்; அந்த இடம் எழுசுனை என்று இப்போது வழங்குகின்றது. ‡ நால்வர் = நக்கீரர், அருணகிரி நாதர், குமர குருபர சுவாமிகள், சிதம்பர சுவாமிகள். § குன்றுதோறாடல்.

தோறும்விளை யாடுகுக சோலைமலை வாழிறைவ
ஆறுபடை வீட்டி லமர்ந்தோனே—நீறுபுனைந்
தேத்தி நினைப்போர் இதயத் தமிர்துதவி
தோத்திரமுஞ் சொல்வதற்குச் சொல்லருளும்-மூர்த்தியே
ஆறு திருவெழுத்தும் அன்பின் நிலைகண்டு
கூறுமவர் கண்ணிற் குடிகொள்வோய்! ஈறிலாய்!
ஓரெழுத்தி லாறெழுத்தை ஓதுவித்தாய்! என்தலையின்
ஈரெழுத்தை மாற்றாத தென்னேநீ—நீரெழுத்தாய்;
நீலமலர் கண்டாலுன் * நீலகிரி யேத்துவேன்;
நீலக் கடல்கண்டால் நீலநிறக்—கோலமயில்
தன்னைநினைந் தேபணிவேன் சண்முகா! என்முன்னே
பொன்னனையார் கண்தான் புலப்பட்டால்-மின்னயில்வேல்
சட்டென்று தோன்றிச் சரணளிக்கும்; எங்கேனும்
சுட்ட பொரிகாணிற் சுந்தர என்—திட்டியிலே
தாரகையெ லாம்பொரியாத் தான்பொறித்த நின்சேவல்
நேரெதிரே வந்து நிலைகாட்டும்;—ஆரமுதே
சுண்டைக்காய் விற்கின்ற சோலைக் குறத்திசெவின்
இண்டைக்கே வெட்சிபுனை எம்மானே!—†கண்டைச்சீ
என்றஇனிப் பேகொண்ட இன்பமொழி யாள்வள்ளிக்
குன்றி லுறையுங் குலப்பேதை—என்றனையாள்
அம்மைபுரி பேரன்பும் ஆறுமுகத் தப்பாவுன்
செம்மைநிறை பேரருளுந் தேறுவேன்;—‡சும்மை
இடியும் மழையும் எதிரின் இடையே
துடியாஞ் § சசிவல்லி தோன்றி—அடிமலர்தான்
இந்தா எனத்தந் தெனக்கபயம் சொல்லிமிக
நந்தா வளங்கள் நயந்தருளும்!—எந்தாய்
$ "முருகன் தனிவேல் முனிநங் குருவென்
றருள்கொண் டறியார் அறியும்—தரமோ"
முருக முருக முருக முருகென்
றுருகி உரைப்போர் உரையென்—னருகில்
உறக்கேட்டால் இவ்வுலகம் உய்யஓ ரன்பர்
திறப்பாட்டாற் சொற்சந்தஞ் சேரும்—அறப்பாக்கள்
ஆகுந் திருப்புகழென் அங்கம் புளகிப்பப்
பாகுங் கசந்திடப் பண்ணியென்றன்—தேகமெலாம்
இன்பம் எழச்செய்யும்; ஈசாஇவ் வாறேநான்

---

* நீலகிரி=நீலோற்பலகிரி=திருத்தணிகை. † கோழி தாரகை (நட்சத்திரங்களை) நெல்லாக் கொறித்ததைக் கல்லாடத்திற் காண்க. ‡ கண்டு=கற்கண்டு. § சும்மை=ஒலி. $ சசிவல்லி=தேவசேனை
§ கந்தரநுபூதிச் செய்யுள்.

அன்பு குறையா அடிமையாய்—என்புருகி
கந்தா! முருகா! கருணா கரகுமரா!
மந்தா கினிமைந்த! வானோர் தஞ்!—சிந்தா
குலந்தவிர்த்த கோமானே! கும்பிடுவார்க் கென்றும்
மலந்தவிர்க்கும் வாழ்வே வணங்கார்—பலந்தவிர்க்கும்
பண்ப திருப்புகழைப் பாடிப் பணிவோர்தம்
நண்ப எனத்துதித்தே நான் மீட்டும்—மண்புகா
வண்ணமெனை யாண்டருள்வாய் வள்ளால் தணிகேச
எண்ணமிஃ தீடேற வே.

ஒருநாள் மாலை

கடற்கரை சென்று காற்றை நுகர்ந்தே
உடற்கட னுறுதும் யாமென யாங்கள்
நெருநன் மாலை விரும்புநண் பினராய்
உவந்தன பேசிக் கவலை துறந்து
சென்று மணலின் இன்றுறு மின்பம்
பெரிது நமக்கெனப் பேருரை யாடி
உரிமையிற் சிறந்த உண்மை யறிவாம்
இறைவன் படைப்பின் இயல்பினை நோக்கி
நிறைமகிழ் பூத்து நீள்திசை காணூஉ
கதிரோன் முகிலிற் கரந்திடு காட்சி
எதிரதாத் தோன்ற எய்திப் பேரின்பம்
திளைத்துக் காரும் வளைத்து வருதலைச்
சுற்றிப் பார்த்துச் சோவென மழையும்
உற்றிடு முண்மை ஓடுதல் வேண்டும்
என்று நினைந்தே யிருப்ப மழையும்
நன்றமர் கடவுள் நல்லருள் போலக்
குன்றும் குளிரக் குலவிப் பொழிய
ஓடி மரங்களி லொதுங்கி யொதுங்கி
பாடிக் களித்துப் பனிமழை தூவ
வீடு புகுந்து விரும்பிய வுண்டு
நீடிய வுவகையில் நின்று
கூடிய இன்றுயில் கொண்டன மாதோ.

—மணி. திருநாவுக்கரசு முதலியார்.

திருக்குறள்—ஓர் அகப்பை

(தமிழ்மறைத் தொண்டர், திரிசிரபுரம்)

"பொச்சாப்புக் கொல்லும் புகழை" என்றார் நந்தமிழ் நாட்டுத் தெய்வப்புலவர் திருவள்ளுவ நாயனார். பொச்சாப் பென்பதற்கு 'மறதி' என்று பொருள் கொள்ளப்பட்டது. 'மறதி' என்னுந் தீக்குணம் புகழினைக் கெடுக்கும் அல்லது மறைக்கும் என்று கூறாது 'கொல்லும்', என்று சொல்லிய நாயனார் நல்லுரையின் வன்மை நயமொடு கவனிக்கத்தக்க தாகும். இம் மறதி தமிழர்பால் நாளடைவில் உடன்பிறந்த பிணியே போல் நீங்காது நின்று அவர்களின் புகழ் வளர்ச்சி யினைத் தடைப்படுத்திற்று என்பது வெளிப்படை.

தமிழ்நாடு பெற்ற பெரும் பேறுகள் பலவுண்டு. அவை களுள் கல்விச் செல்வமும் ஒன்று. இற்றைக்குச் சுமார் ஈரா யிரம் ஆண்டுகட்கு முன்னர்த் தோன்றிய உலகப்பொதுமறை யாம் திருக்குறளினை நந் தாய்மொழியாம் தமிழ்மொழியில் எழுதி உயர்புகழினை நிலைநாட்டிச் சென்ற வள்ளுவரின் பெரும் புகழ் உரைத்தற்கரிது. அவர்களின் மறைமொழியின் பெருமையினை உலக முழுதும் நன்கறியும். இடைக்காலங்களில் தமிழர்கள் இப் பேரற நூலின் முறையினையும் நெறியினையும் நன்குணர்ந்து போற்றியாளாது நெகிழவிட்டு நின்ற தன்மையே இன்று அவர்களின் பெருஞ்சிறப்பினை மாசுபடியச் செய்தது. எந்நாளில் இத்தமிழர்நூல் தமிழர்களிடையே ஆக்கம் பெறு கின்றதோ அந்நாளே தமிழுலகம் சீர்பெற்றுச் சிறந்தோங்கும். நன்னாளாகும்.

'முடியாது' (Impossible) என்னும் சொல் மேனாட்டு வீர னொருவனிடத்தில் காணப்படுவ தில்லை என்பது அந்நாட்ட வர்க்கு ஒரு பெருமையை அளிப்பதாகும். இவ்வுண்மை மிகுதி யும் பாராட்டத் தக்கதொன்று. ஆனால், நமது தாய் நாட்டின் பெருமையோ தமிழ்மறைப் புலவரின் வாய்மையுரைகளினால் வெளிப்படுத்தப் பட்டது. "இல்லை" (No) என்னும் தன்மை வள்ளுவர்பால் இல்லை என்றுதான் சொல்லலாம். ஈகையின் முறையினையும் பெருமையினையும் நன்கு புலப்படுத்தும் ஆசிரியர்,

"இலனென்னும் எவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள"

என்று கூறி முடித்தார். வறிஞருக்கு வரையாது போதிய அளவு கொடுத்து உதவும் பெருநெறி விளக்கப்பட்டது. இவ் வுண்மை நாயனார் வாய்மை மறைக்கோர் இலக்காக மிளிர்கின் றது. வேண்டுவோர்க்கு வேண்டிய நற்பொருளனைத்தும் கொடுத்து இனிமை பயப்பது நாயனார் தமிழ்மறை யொன்றே யாகும். இச்சீரிய தன்மையினைக் காணுங்கால்,

> "இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
> குலனுடையான் கண்ணே யுள"

என்னும் நல்லுரை எம்முறையிலும் பொருந்துவதாகும். சிறிய தோர் உவமை முறையினை விளக்குவோம்.

வாழ்க்கையின் நன்முறையினைச் செவ்விய முறையில் திறம் பட விளக்கும் நம தெய்விகப் புலவரின் பெருநெறிகள் மிகுதி யும் போற்றுதற்குரியன. அவர்கள் எடுத்தாளும் உவமைகளில் விலங்கினங்கள் பல உண்டு. அவைகளில் பெருந்தோற்றம் கொண்ட யானையின் பெருமையும் பெருங் குணங்களும் பற்பல இடங்களில் நன்கு விளக்கப் பட்டிருக்கின்றன.

உயர் குணங்கள் பலவற்றுள்ளும் "ஊக்கம்" என்பது தளராப் பெருமையினை வளரச் செய்வதென்பது ஒருதலை. ஊக்கத்தினை விளக்கப் புகுந்த ஆசிரியர் யானையின் பெருங் குணங்களில் ஒன்றினை அதற்கு ஒப்பிடுகின்றார். போரின்கண் அம்புகளால் புண்பட்ட விடத்தும் தளராது பெருமையை நிலை நிறுத்தும் யானையே போன்று, வருத்தம் பல உண்டான காலத்தும் மன வெழுச்சி குன்றாது நிற்றல் அறிஞர் கடனும். இவ்வுண்மை,

> "சிதைவிடத் தொல்கா ருரவோர் புதையம்பிற்
> பட்டுப்பா டூன்றுங் களிறு"

என்ற குறட்பாவினாலே உணர்த்தப்பட்டது. யானையின் வீரக் குண மொன்றினைப் புலப்படுத்திய ஆசிரியர் உடனுடனே அதன்கண் வெறுத்தற்குரிய பண்பொன்றினை எடுத்துக் காட் டுதல் நன்கறியத்தக்கது. பெரிய உருவத்தோடு கூர்மையான கொம்புகளையுடைய அந்த யானை சிறிய உருவங்கொண்ட புலி யொன்று எதிர்ப்பட்ட காலத்து அஞ்சும் தன்மையுடையது.

> "பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
> வெரூஉம் புலிதாக் குறின்."

இதனால் ஊக்கமின்மையான யானையின் குணம் இகழப்படுத லும், ஊக்கமிருந்த புலியின் குணம் மக்கள் பின்பற்றக் கூடிய

நல்வழியாகக் கூறப்படுதலும் ஆயிற்று. இவ்வொரு விலங்கானது பற்பல இடங்களிலும் இதே போன்று உவமைமுறைகளில் கூறப்படுகின்றது.

தொழில் செய்யுங் காலத்து இடமறிந்து செய்தல் பெரும் வெற்றியினை அளிக்குமென்பது நாயனாரின் நல்லுரையாகும். இடத்தின் உதவிகொண்டு பெருங் காரியங்களையும் சாதிக்கலாம் எனும் உண்மையினை வாழ்க்கைமுறையில் ஒவ்வொருவரும் நன்கு அறிதல் வேண்டும். இம்முறை தமிழ்மறையில் திறம்படக் காணப்படுவதொன்று. பெரும்பலங் கொண்ட யானையொன்று கால் புதையும் அளவுள்ள சேற்றினிடத்தில் அகப்பட்ட விடத்துச் சிறிய தோற்றமுள்ள நரிகளால் கொல்லப்படும்.

"காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு"

என்றார் ஆசிரியர். இடமறிந்து தொழில் செய்தல் என்றென்றும் வெற்றிதரும் என்னும் உண்மை இதனால் வலியுறுத்தப்பட்டது. தொழில்முறையின் வகைகளினை நாயனார் பற்பல இடங்களிலும் நன்கு விளக்கியுள்ளார்.

பிடித்து வளர்க்கப்படும் விலங்கினங்களில் யானையும் ஒன்றாகும். காட்டின்கண் வசிக்கும் ஏனைய விலங்கினங்களை விட யானையினைப் பிடித்தல் மிகவும் அரிதாம். அவ்வரிய காரியமானது தொழில்முறையின்கண் ஒரு தொழிலினைச் செய்து முடித்தற்கு உவமையாகக் கூறப்பட்டது. செய்யப்படுகின்ற ஒரு தொழிலின் துணைகொண்டு வேறொரு தொழிலினையும் முடித்தற்கு உபாயமான முறையில் நடந்துகொள்ளும் தன்மை, ஒரு யானையின் துணைகொண்டு மற்றொரு யானையினையும் கட்டியதை யொக்கும் என்ற ஆசிரியரின் அரும் பெரும் உவமையழகு என்றென்றும் போற்றற் குரியதாகும்.

"வினையான் வினையாக்கிக் கோட னனைகவுள்
யானையால் யானையாத் தற்று"

என்ற குறட்பா இதன் உண்மையினை நன்கு புலப்படுத்தும்.

உள்ளுவதெல்லாம் உயர்வாக .உள்ளக்கடவர் என்பது நாயனாரின் பெருநோக்கமாகும். இக்கருத்தினை இரு விலங்கினங்களின் துணைகொண்டு ஆசிரியர் கூறிப் போந்தார். இங்கும் யானையின் தோற்றமே ஆசிரியருக்கு உதவியாய் நின்றது. காட்டிலோடுகின்ற விலங்கினங்களில் முயலினைத் தப்பாது

எய்த வேடுவனைவிட யானையின்மீது குறிவைத்து அதனை எய்யாது குறிதப்பி நின்ற வேடுவனே மிகச் சிறந்தவனாகக் கருதப் படுகின்றான்.

"கான முயலெய்த வம்பினில் யானை
பிழைத்த வேலேந்த லினிது."

உலக வாழ்க்கையில் பொருட்செல்வத்தின் இன்றியமையாத் தன்மையினையும், அதனை ஈட்டும் முறையினையும் அதனால் பலனடையும் வழியினையும் திருவள்ளுவர் பல இடங்களிலும் நற்பொருள் கொண்டு விளக்குகின்றார். தொழில முறையில் பொருளுதவி மிகுதியும் வேண்டுமென்னுங் கருத்தினை மிகத் தெளிவாக விளக்கும் ஆசிரியரின் சீரிய தன்மை ஆய்ந்தறியத்தக்கது. அப்பொருளின் பெருமையினை உவமை முகத்தான் விளக்கவேண்டி யானைப் போரொன்றினைக் குறிப்பாக எடுத்துக்காட்டுகின்றார். தன் கையதாகிய பொருளினைக் கொண்டு ஒரு தொழிலைச் செய்பவனின் செய்கையானது ஒருவன் மலைமீது நின்று யானைப் போரொன்றனைக் காணுவதை யொக்கும்.

"குன்றேறி யானைப்போர் கண்டற்றாற் றன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை"

குன்றேறி நின்ற ஒருவன் அச்சமும் வருத்தமும் இல்லாது மகிழ்ச்சியுடன் யானைப் போரினைக் காணுதலை யொக்கும் என்ற உவமையினழகு உன்னி உன்னி மகிழத்தக்கதாகும்.

இதே போன்று நமதாசிரியரின் பெருமையினை வெளிப் படுத்தும் நுண்ணிய முறைகள் பலவுண்டாம. அழகு நிறைந்த பெண்ணொருத்தியின் மார்பின் மேலிட்ட துகிலுக்குப் புலவர் எடுத்துக் கூறும் உவமை பெரிதும் வியக்கத்தக்கது.

"கடாஅக் களிற்றின்மேற் கட்படாம் மாதர்
படாஅ முலைமேற் றுகில்."

விருந்தோம்பலை வேளாண்மையாக உருவகப்படுத்தப்பட்டிருக்கிறது. வேளாண்மை என்பது பயிரிடும் தொழில்; உழுது, நீர் பாய்ச்சி, பயிரிட்டு வளர்த்து, களைகட்டி அப் பயிரின் பயனைப் பெறுவதாம். விருந்தோம்பி வேளாண்மை செய்தலாவது விருந்தோம்பல் முதலிய பதின்மரைப் பாது காத்தலாகிய உழவைச்செய்து ஆர்வ நீரைப் பாய்ச்சி அன்பாகிய நல்வினைப் பயிர் செய்து, நட்பாகிய மலர் மலரும்படி செய்து, தீவினையை ஒதுக்கி அருளாகிய காய் காய்க்கப்

பேரின்பமாகிய கனியை அருந்துவதாம். அச்சிடப்பட்ட புத்தக உரையாசிரியர்கள் "விருந்தோம்பி செய்தற் பொருட்டு" என்று வள்ளுவனார் மொழிந்ததாக வைத்துக்கொண்டு பொருள் எழுதியிருக்கிறார்கள்.

கற்கத் தகுந்தது கல்வி. கேட்கத் தகுந்தது கேள்வி. வேட்டத் தகுந்தது வேள்வி. இல்வாழ்வானுக்கு விருந்தோம்பல் வேள்வியாகும். அதுவே ஒப்பற்ற பூசனையும் சிறந்த நோன்புமாகும். யாகமும் அதுவே. ஈகையால்தான் இல்லறத்தானுக்குத் தியாகம் (தன்னலம் இழத்தல்) என்ற நற்குணம் வரும்.

பொருளைக் காத்து அதனை யிழந்து தம் நிலையை நொந்து தம்மைத்தாம் இரங்குவர் என்று உரையாசிரியர்கள் பொருள் கொண்டிருப்பது 25-வது அதிகாரம் "பொருள் அற்றார் பூப்பர் ஒருகால், அருள் அற்றார் மற்று ஆதல் அரிது" என்கிற ௮-வது குறளிற்கு முரணுவதால் ஈட்டிய பொருளைக் கொண்டு விருந்தினர் முதலிய பதின்மரைப்பேணி ஐவகை வேள்விகளைச் செய்து அவைகளின் பயனை எய்தாதார் "தக்காருக்கு அளியாமல் அப்பொருளை மிக வருந்திப் பாதுகாத்து அதனால் பற்றுக்கோடிலராயினோம்; அதாவது, அன்பு அருள் இல்லாதவர்களாகி வீட்டுப்பேற்றை யிழந்தவர்களானோம்" என்று இரங்குவார் என்பது சரியான பொருளாகும். பொருளில்லாதார்க்கு இவ்வுலகில்லை என்ற குறள்வாக்கு இவ்வதிகாரத்தில் "செய்யாள் உறையும்", "வித்துமிடல் வேண்டுங் கொல்லோ" என்ற வார்த்தைகளிருப்பதால் இவ்விடத்திற்குப் பொருந்தாது.

(தொடரும்)

காப்பியத் துறைத் தெளிவு

(புலவர் மறை)

[வரகூர் வ. சி. வேங்கடராமன்.]

வடமொழியாளருட் சிலரால் பொறுமை காரணமாகப் பாட நூலென இடைக்காலத்துப் பயில்விக்கப்பெறுத வோர் குறை பெற்ற வடமொழி நூலொன்று தமிழுக்கும் பண்டைத் தமிழ்ப்புலவர் புலமை யாராய்ச்சிக்கும் பயன்படுவதாகச் சிறியேனுக்குத் தோன்றின வோரெண்ணம் "காப்பியத் துறைத் தெளிவு" எனப் பத்தியல்கள் கொண்ட ஒரு நூலை எழுதியச்சிட்டு வெளியிடுவித்தது.

அந்நூலுட் கூறிய கிளைப்பொருளே இப்போது வெளியிடும் புலவர் மரபுமாம். அந்நூலிலும் இதனிலும் பொருத்தமுற என்னுற் சிலவே யியைக்கப்பெற்றுள. வடமொழியுதாரணப் பொருள்களை எழுதுவதைவிடத் தமிழ்ச் செய்யுளுதாரணங்கள் குறிப்ப தியையுற்றதாகலான் அவற்றை நழுவவிட்டனன். அந்நூற் கருத்து முற்றும் தமிழ்மொழி முறைமைக் கேற்ப மொழிபெயர்த்து எழுதி வெளியிட்ட பின் அவ்வடமொழி நூற் புலவர் பெயரைப் பொன்னெழுத்திற் பொறித்து விடுகின்றனன். இத்துணையும் ஈங்கு முறையென யான் கருதியெழுதி யிருப்பதைத் தமிழன்பர் காய்தலுவத்தலகற்றிக் கடைக்கணிப்பாரென வெண்ணுகின்றனன்.

புலவர் மரபு

புலவர்கள் தஞ் செயல்களில் கொண்ட முடிவு, மறை (இரகசியம்), உறுதி, மேலானபழக்கமுறை (ஆசாரம்), வழக்கமுறை (சம்பிரதாயம்), குறிப்பு எனுமிவை யடங்கியது ஈண்டுப் புலவர் மரபு எனப்படுகின்றது.

நூல் தெரியாமையால் நூற்குப் புறம்பானதாகியும், நுழைபுலமின்மையால் உலகத்தவரா லறியப்படாததாகியும் இருப்பினும், பழக்க முறையான் வந்ததாக எந்தப் பொருளைப் புலவரமைக்கிறுரோ அது புலவர் மரபென்று சொல்லப்படும். இத் தவறு எவ்விதம் காப்பியங்களி லமைக்கப்பெறும் என்பர் சிலர். இம்மாதிரி யமைப்பது புலவர் வழிகளைப் பின்பற்றுவதாம். இஃதெப்படித் தவறுமென்பர் ஆசிரியர்

அப்படி யெனில் காரணஞ் சொல்ல வேண்டும் என்பர் சிலர். இதோ காரணஞ் சொலலப்படுகிறது என்பர் ஆசிரியர்.

பண்டைப் புலவர்கள் ஆயிரங் கிளைகளையுடைய மறை நூல்களை யுருப்பு நூல்களுடனோதிக் கரைகண்டு நூல்களை யறிந்து பற்பல நாடுகளும் பற்பல தீவுகளுஞ் சுற்றி எவ்வெப் பொருள்களைப் பார்த்தனரோ அவ்வப்பொருள்க ளெல்லா வற்றையும் பாட்டினிலமைத்தனர். அவைகள் நாட்டு மாறு பாட்டினானும் கால வேற்றுமையானும் வேறுபினமையைக் கண்டும முன்னிருந்தவாறே பண்டைப் புலவர்க்குப் பின் வந்தோர் அவற்றைத் தம் பாடல்களில் மாற்றுதமைத்தனர். அவ்வாறமைந்ததுவே புலவர் மரபெனப் படுகின்றது.

மரபு என்ற விச்சொல் முதற் காரணமறியாத—அமைத்த இடங்கள் மட்டுங்கண்ட புலவர்களுடைய வாய்மொழி (வழி) யில் வந்தது. பின்பு இச்சொல் இடுகுறியளவாகியே நின்றது. இச்சொல்லிற்குக் காரணம் பொதுவாய்ப் பண்டைப் புலவரை மருவிவருவதென்பதாகச் சொல்லலாமாயினும், இச்சொல் மிகத் தொன்மை வாய்ந்த தென்பதில் யாவரு மொருவழிப் பட்ட கருத்துடையராவர்.

முதல் வகையாம் புலவர் மரபு பண்டைப் புலவரான் வகுக்கப் பெற்றது. பிறிதொரு திறத்ததாம் புலவர் மரபு ஒருவரை விட யொருவர் புகழ் பெறுவதற்காகத் தஞ்செயல் நிறைவேறப் பொல்லாத பரத்தர்*களால் பரவச் செய்யப் பெற்றது.

இரண்டாவதாம் புலவர் மரபு புலவரால் நாட்டிய வழக் கெனத் தமிழில் பெயர்கொண் டிருக்கிறதென்பதும், அது மடலேறல் வரைபாய்தல் எனப் பண்டு மிருந்தன வென் றெண்ணிவிடக் கூடிய வகைகளையுடைய தென்பது தெரிய வரும்.

மேன்மேலும் பல பொருள்கள் நுவல்வனவாய் இவ் வடமொழி நூற் கருத்துக்களனைத்தினையும் கருக்கொண் டுள்ள தொல்காப்பியச் சூத்திரங்கள் அடியிற் றரப் பெறுகின்றன.

மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை
மரபுவழிப் பட்ட சொல்லி னான. தோல். மரபு 90

* தூர்த்தரென வடமொழி நூல் குறித்ததனை யொப்ப யான் பரத்தரென்றேன்.

மரபுநிலை திரியிற் பிறிதுபிறி தாகும். தொல். மரபு 91

வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி யவர்கட் டாக லான. தொல். மரபு 92

மரபுநிலை திரியா மாட்சிய வாகி
யுரைபடு நூறா மிருவகை யியல
முதலும் வழியுமென நுதலிய நெறியின. தொல். மரபு 93

புலவர் மரபினைக் கவி சமயம் என்பர் வடநூலார். அப்புலவர் மரபு மண் விண் பாதலமெனு மூவிடங்களையு மியைந்திருப்ப தாம். விண்பாதல மியைந்த இரு (புலவர்) மரபுகளையும் விடச் சிறந்தது, மண்ணுலகியைந்த கவிசமயம் (புலவர் மரபு) ஆம்.

அம்மண்ணுலகியைந்த கவிசமயம் (புலவர் மரபு)

1. இன மரபு
2. பொருள் மரபு
3. பண்பு மரபு
4. தொழில் மரபு

என நால்வகைப்படும்.

இன மரபினை சாதி சமய மெனவும்
பொருண் மரபினைத் திரவிய சமய மெனவும்
பண்பு மரபினைக் குணசமய மெனவும்,
தொழில் மரபினைக் கிரியா சமய மெனவும்
வடநூலார் குறிப்பர்.

அந்நால் வகைகளுள் ஒவ்வொன்றும் தனித்தனி மூன்று வகைப்படும்.

முதல் வகை, உலகிலும் நூலிலும் இப்போதில்லாததை யமைப்பதாம்.

இரண்டாம் வகை, உலகிலும் நூலிலும் இருப்பதைப் பாவில் அமைக்காமலிருப்பதாம்.

மூன்றும் வகை, பழக்க முறையிற்படச் சொல்லியதாம்.

குறிப்பு:—பின்வரு முதாரணங்களிற் போலப் பல்வேறு நூல்களில் பல்வேறிடங்களில் ஆங்காங்குப் புலவர் மரபுகள் கண்டு இன் புறற்பாலன.

(தொடரும்)

ஊழிக்கனவு

[N. K. வேலன், பி. ஏ.]

ஆல்டேன் (Haldane) என்னும் ஆங்கிலப் புலவரின், ஆராய்ச்சி நூல் ஒன்றை நேற்றிரவு படித்துக்கொண்டிருந்தேன். அந்நூலில் ஊழிக்காலத்தின் தன்மைகளைப்பற்றி விளக்கமாகக் கூறப்பட்டிருந்தது. யான் அந்நூலைப் படித்த தன்பின் அயர்ந்து உறங்கியபோது ஒரு கனவு தோன்றியது. அதனை இங்குச் சுருக்கி வரைந்துள்ளேன்.

பூமியின் சுழற்சி சிறிது சிறிதாய்க் குறைந்து வருவது போல் எனக்குத் தோன்றிற்று. இதனால் பகற்பொழுது நீண்டுகொண்டே போயிற்று. உலகின் சுழற்சி குன்றிவருவது உணர்ந்து மக்கள் எல்லோரும் வேறு உலகங்களிற் குடிபுகுவதற்கு வழிகள் தேடலாயினர். வானவெடி (Rockets) களின் உதவியால் பல வீரர்கள் அடுத்த உலகங்களுக்குச் செல்ல முயன்றனர். நீண்ட இரும்புக் கூடுகளில் மக்களை ஏற்றி, அவற்றைப் பீரங்கி வாயில் வைதது மலையுச்சிகளிலிருந்து சுட்டனர். இக்கூடுகளா காற்றினும கடுகிச் சென்று குறிப்பிட்ட உலகிற்குப்போய்ச் சேர்ந்தனர். ஆயினும், இக்கூடுகள் வேறு உலகங்களுடன் மோதிக்கொண்டு உயிர்க்குத் தீங்கு விளைத்தன. இதனால் பல வீரர்கள் உயிர் துறக்க நேர்ந்தது.

அறிவும் ஆற்றலும் நிறைந்த ஒரு சிலர் அரும்பாடுபட்டுத் திங்கள் (Moon) மண்டிலத்திற்குப் போய்ச் சேர்ந்தனர். இவர்கள் ஆங்குள்ள மலைகள் பள்ளத்தாக்குகளா முதலியவற்றின் அமைப்புக்களைப் பூமியிலிருநதவர்களுககுத் தெரிவித்தனர் இவ்வீரர்கள் மீண்டும் பூமிககுத் திருமபிவர இயலாது போயிற்று. திங்கள் மண்டிலத்திற் காற்று என்பதே கிடையாது. இவர்கள் தங்களுடன் எடுத்துச் சென்ற உயிர்வளி (Oxygen)யும் செலவழிந்து விட்டதால் அனைவரும் மூச்சுத் தடுமாறி அங்கேயே மாண்டனர்.

இதற்குப் பின் செவ்வாய் (Mars) மண்டிலத்திற்குச் சிலர் போய்ச் சேர்ந்தனர். இவ்வுலகம் 4172 மைல் குறுக்களவுள்ளது. ஆயினும், மக்கள் குடியேறுவதற்கு வேண்டிய வசதிகள் அங்கு இல்லையென இவ்வறிஞர்களால் தெரிந்தது. ஆங்குள்ள உயிர்களின் பொறிகளும், புலன்களும் முற்றிலும் மாறுபட்டிருத்தலை இவர்கள் கண்டனர்.

வெள்ளி (Venus) மண்டிலம் சற்றேறக்குறைய பூமியின் அளவு இருக்கும். வெள்ளி மண்டிலத்திற்குச் சென்ற வீரர்கள், அதன் கொடிய வெப்பத்தைத் தாங்கமாட்டாமல் தவித்தனர். அன்றியும், அங்கு உயிர்வளி (Oxygen) மிகக் குறைவாக இருந்ததால் அவர்களும் அழிவுற்றனர்.

பூமியின் ஒரு நாளென்பது 48 நாட்களாக நீண்டுபோயிற்று. இரவுகளில் தாங்கமுடியாத குளிர் உண்டாயிற்று. பகல் வேளையில் வெயில் கடுமையாக இருந்தது. வீடுகளைக் குளிர்ச்சியாக வைத்துக்கொள்வதற்குப் பல புதிய வழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இம்மாறுபாடுகளால் செடிகள் இரவில் விதையாக இருந்து பகல் முழுவதும் வளர்வதும் மாலையில் பட்டுப்போவதுமாக இருந்தன. செடிகளின் ஆயுட்காலம் ஒரு நாளாகக் குறைந்து போயிற்று. விலங்குகளும், பறவைகளும், பாம்புகளும் உலகிலேயே இல்லாமல் மறைந்துபோயின. வேண்டும்போது வெப்பமோ, தட்பமோ செய்துகொள்ளவும் புதிய வழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

அஞ்சா நெஞ்சம் படைத்த வீரர் பலர் மீண்டும் மீண்டும் வெள்ளி மண்டிலத்திற்குச் செல்ல முயன்றனர். இம்முயற்சி பன்முறை தவறிப்போய் இறுதியில் கைகூடிற்று. இங்ஙனம், வெள்ளி மண்டிலத்தை அடைந்த வீரர்கள் தாம் இறந்து படுவதற்குள் ஆங்குள்ள நிலைமையைப் பூமியிலுள்ளவர்களுக்கு அறிவித்தனர். வெள்ளி மண்டிலத்தில் குடியேறவேண்டுமெனில் கொடிய வெப்பத்திற்கும், குறைந்த காற்றிற்கும் உடல் தாங்கும் வண்ணம் பழகிக்கொள்ள வேண்டுமென்பது உறுதியாயிற்று. இதன் பொருட்டுப் பல்வேறு ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன.

வெப்பமிகுந்த இடங்களிலும், காற்றில்லாத இடங்களிலும் இருந்து பழகிய மக்களைப் பொறுக்கி எடுத்து மிகப் பெரிய கூண்டுகளில் வைத்து வெள்ளி மண்டிலத்திற்கு அனுப்பினர். இங்ஙனம் அனுப்பப்பட்ட மக்களுடன் யானும் அங்குப் போய்ச் சேர்ந்தேன். நெடுந்தொலைவிலுள்ளவர்கள் பேசுவதும், பாடுவதும் ஒலிபரப்பி (Radio) இல்லாமலேயே அங்கிருந்து எங்களுக்குக் கேட்க முடிந்தது. காற்றின் அழுத்தம் மிகக்குறைவாக இருந்ததால் நாளடைவில் எங்களுக்குப் பறக்கும் ஆற்றலும் உண்டாயிற்று. மின்சாரம், காந்தம் இவையிரண்டும் எங்களுக்குப் புதிய புலன்களாக அமைந்தன.

நாங்கள் வெள்ளி மண்டிலத்திற் குடியேறியபின், திங்கள் மண்டிலம் பூமியை நோக்கி மிகவும் விரைவாக நெருங்கிச்

செல்வதைக் கண்டோம். பூமியும் திங்களும் மோதிக்கொள்ளும் காலம் வந்துவிட்டதென உலக மக்கள் அஞ்சி நடுநடுங்கினர். பின்னர், பூமியின் கவர்ச்சியினால் திங்கள் மண்டிலத்தில் உடைப்புக்கள் ஏற்பட்டன. பூமியின் முடிவு கதுமென வந்தது. திங்கள்மண்டிலத்தில் பூமிக்கு அருகிலுள்ள பகுதி வெடித்துத் தீக்குழம்பினைப் பூமியின் மேல் கக்கிற்று. இதன் கொடிய வெப்பத்தினால் பூமியிலுள்ள ஆறுகளும், குளங்களும் வற்றிப்போயின. கடல்களும் கொதித்துப் பொங்கின. மரம், செடி, கொடிகள் எல்லாம் தீய்ந்துபோயின. நொடிப்பொழுதில் பூமியின் இருமுனைகளிலும் உள்ள பனிமலைகள் உருகிப போயின. திங்கள்மண்டிலம் உடைந்து பூமியின் மேல் விழுந்துகொண்டே யிருந்தது. உலகமெங்கணும் ஒரே அனற்பிழம்பின் வடிவமாகத் தோன்றியது.

இக்கொடிய ஊழிக்காலத்தின்போது தோன்றிய "வரைபறித்து இயங்கும் கடுங்காற்றினை" ஆற்றாது மக்கள் கலங்கி நின்றனர். இதற்குப்பின் புகையும், நீராவியும் பூமியைச் சூழ்ந்துகொண்டதால் பின்னால் நடந்தது எங்களுக்குத் தெரியவில்லை. மீண்டும் பூமி தோன்றியபொழுது திங்கள் மண்டிலத்தின் உடைந்த துண்டுகள் பூமியின் பெரும்பகுதியை மூடி மேடிட்டிருந்தன. மற்றும் சில பகுதிகள் கடலின் உள்ளே வீழ்ந்து கிடந்தன. உலகில் உயிர்கள் அனைத்தும் ஊழித்தீயினுக்கு இரை ஆகிவிட்டன. திங்கள்மண்டிலம் மேலும் மேலும் நொறுங்கி வீழ்ந்துகொண்டே இருந்தது. இதனால், பூமியில் எங்கே பார்த்தாலும் மிகப்பெரிய மலைகள் புதிது புதிதாய் உண்டாயின. பூமியின் வடமுனையும் தென்முனையும் வேறாகப் பிரிக்கப்பட்டு நிலம் மூன்று பிரிவுகளாகத் தோன்றியது.

வெள்ளிமண்டிலத்திற் குடியேறிய மக்கள் ஊழிப்பெரு வெள்ளத்தினின்றும் தங்களைக் காத்த இறைவன்றன் பேரருளை எண்ணி எண்ணி வியந்து பாராட்டிக்கொண்டு இருந்தனர். வெள்ளிமண்டிலத்திலிருந்து மீண்டும் பூமிக்குத் திரும்பிச் செல்வதற்கு வேண்டிய முயற்சிகள் நடைபெற்றன. இந்நிலையில் உறக்கம் என்னைவிட்டு அகன்றது. யான் கண்டது அனைத்தும் கனவு என்பதை உணர்ந்தேன்.

ஊழிவெள்ளத்தின் தன்மையை,

"நெடுநில வளாகமும் அடுகதிர் வானமும்
அடையப் பரந்த ஆதி வெள்ளம்"

எனவும்,

"நாகர் நாடு மீமிசை மிதந்து, மீமிசை உலகம்
கீழ்முதற் றாஅழ்ந்து
ஒன்றா வந்த குன்றா வெள்ளம்"

எனவும், திருக்கழுமல மும்மணிக்கோவையில் விளக்கிக் கூறி யிருத்தல் நோக்குக.

"வெள்ளத்தே தோன்றிக் கழுமலத்தே வீற்றிருந்தென்
உள்ளத்தே நின்ற ஒளி"

எனப் பட்டினத்தடிகளும் அருளிச் செய்துள்ளனர்.

தொழிற்பெயர்களைத் தமிழாக எழுதுங்கள்

பிராம்மணாள், பிராமணாள், பிராம்ணாள்	பார்ப்பனர், பிராமணர்
ஹோட்டல், ஓட்டல், ரெஸ்டாரெண்ட், லஞ்ச்ஹோம், கபே, கேப்	சிற்றுண்டிவிடுதி, சிற்றுண்டிச்சாலை
மீல்ஸ் ஹோட்டல், போர்டிங்கும் லாட்ஜிங்கும்	உணவு விடுதி, உணவிடமும் உறைவிடமும்
லாண்டிரி, லாண்டரி, வாஷிங் கம்பெனி	வெளுப்பகம், சலவைச்சாலை, சலவையகம்
ஷேவிங் சலூன், ஏர் டிரஸ்ஸிங் சலூன், ஏர் கட்டிங் சலூன், கிறாப் செய்யப்படும்	சிரைப்பகம், முடிதிருத்தகம், முடிதிருத்துச்சாலை, முடிவெட்டகம்
என்பவற்றை	என்றெழுதுங்கள்

திராவிட மொழிகள்

[காழி சிவ. கண்ணுசாமி B. A.]

இந்தியப் பெரு நாடெங்கணுந் திராவிடப் பெருங்குழு பரவிப் படர்ந்திருந்தது உண்மையே. எனினும், அப்பெருங் குழுவைச் சேர்ந்த மக்களியாவரும் திராவிட மொழியினத்தைச் சேர்ந்த மொழிகளையே பேசி வந்தார்களென்பதில்லை. வடபால் அமைந்தோர் பின்னர்த் தம்மை அடிப் படுத்திய ஆரியர் நாகரிகத்தில் இயல்பாய்ச் சிக்குண்டு முற்றிலும் ஆரியராகவே மாறி ஆரிய மொழிகளையே பேசி வருவாராயினார்; எனினும் ஆராய்ந்தால் எளிதில் வேறு பிரித்துக் காணக்கூடிய திராவிடக் குழூஉச் சிறப்பியல்புகளை அவர்கள் முற்றிலும் இழவாதவர்களாகவே இருந்து வருகின்றனர்.

இனி, இவ்வடபா லாரியக்கலப்பினரை யொழித்து விடின், முண்டா மொழியினத்தைச் சேர்ந்த மொழிகளைப் பேசி வருவோர்களிற் பெரும்பான்மையோரும் திராவிட மொழியினத்தைச் சேர்ந்த மொழிகளைப் பேசி வரும் ஏனையோரிற் பெரும்பான்மையோரும் திராவிடர்களே என்று ஒருவாறு துணிந்து கூறலாம். ஒரே திறப்பட்ட உடலமைப்பியல்பு வாய்ந்த மக்களால் இந்த இரின மொழிகளும் பெரும்பாலும் பேசப்பட்டு வருகின்றமை கொண்டு முண்டா மொழியினத்திற்கும் திராவிட மொழியினத்திற்கும் தொடர்புண்டென்று கருதினார் அறிஞர் பலர்; எனினும்,* இந்திய மொழி யாராய்ச்சி யளவைக் கழகத்தினர் இடைவிடாது அரிதிற் றொடர்ந்து நடத்திவந்த ஆய்வுகளின் பயனாய் அக் கருத்துத்தானும் நிலைபெறாதாயிற்று. சொற்களின் ஒலிப்பு முறையையாதல், ஆக்கமுறையையாதல் ஆராய்ந்து பார்க்கினும் அவ்விரின மொழிகட்கிடையே ஒற்றுமையன்றி வேற்றுமைகளே மிகுத்துக் கிடைக்கக் காணலாம். ஒலிப்பு முறையில் வேறுபாடு; பால் குறிப்பு முறையில் வேறுபாடு; வேற்றுமை ஏற்கு முறையில் வேறுபாடு; எண் முறை யமைப்பில் வேறுபாடு; இன்மை, அன்மை, மறுதலை என்ற எதிர்மறையைக் குறிப்பதில் வேறுபாடு; சொற்கூட்டத் தொகுதியிலோ அளவற்ற வேறுபாடு!!! அவற்றிடையே காணப்படும் ஒற்றுமைகள் இரண்டொன்றும் உண்டாலோவெனின், அவையிரண்டொன்றும், உலகெங்கணும் பரவியுள்ள பண்

* The Linguistic Survey of India

மொழித் தொகுதிகளுள் ஒன்றற் கொன்றினிடையே பொதுப் படக்காணப்பெறும் ஒற்றுமைப் பெற்றிகளேயாமென விடுக்க.

திராவிட மொழியினத்தைக் குறித்து, இனி, நோக்குவாம். இவ்வினத்தைச் சேர்ந்த மொழிகள் தென்னிந்தியாவிலும், மத்திய இந்திய மலைநாடுகளிலும் பெருவாரியாக வழங்கி வருவனவாம். இரண்டு மொழிகள் இவ்வெல்லையுங் கடந்து வடாஅது சென்று, [1]சோட்டா நாகபுரியிலும், [2]சண்டாளபர்காணஸ் பகுதிகளிலும் முண்டா மொழியினங்களோடு உடன் வழங்கியும், இந்தியப் பெருநாட்டின் வடமேற்கு மூலையிலுள்ள [3]பலுச்சிஸ்தானத்திடையே [4]வராகி என்ற பெயரால் வழங்கியும் இன்றளவும் இருந்து வருகின்றன. வடமொழி வாணர் பலருக்கு மேற்குறித்த வராகி என்ற திராவிட மொழியிருந்ததாகவே தெரிந்ததில்லை. [5]ஆந்திர பாஷா [6]திராவிட பாஷா என்ற இரண்டு பிரிவுகளே அவர்களறிந்தன; அவற்றுள் ஆந்திரபாஷா என்பது இப்போதைய தெலுங்கு மொழி; பின்னையதான திராவிட பாஷா என்பது தெலுங்கு ஒழிந்த ஏனைய மொழிகள். இப்பிரிவு ஒருவாறு உண்ணூட்டு மொழிக் கணக்குப் புள்ளி விவரங்களோடு ஒத்திருக்கின்றமை நோக்கற்பாற்று:—

			பேசுவோர் தொகை (1901-ஆம் ஆண்டு)
I திராவிடக் குழுவினம் :—			
தமிழ்	....	....	16,525,500
மலையாளம்	....	....	6,029,304
கன்னடம்	....	....	10,365,047
குடகு	....	....	39,191
துளுவம்	....	....	535,210
தோதவம்	....	....	805
கோட்டா	....	....	1,300
குறுக்கம்	....	....	592,351
மால்டோ	....	....	60,777
II இடைப்பட்ட மொழி :—			
கோண்டு முதலியவை			1,123,974

1. Chota Nagpur. 2. Santal Parganas. 3. Baluchistan.
4. Brahuri. 5. Andra—bhasha. 6. Dravida bhasha.

III ஆந்திரக் குழுவினம் :—

தெலுங்கு	20,696,872
காண்ட்	494,099
கோலாமி	1,505
IV வராகி	48,589
மொத்தம்	56,514,524

* சென்னை மண்டில அரசியன்முறை விளக்கம் என்னும் ஒப்பரிய தொகுப்பிலிருந்து, திராவிட மொழிச் சிறப்பியல்பு களைக் காட்டுவதான பின்வருங் குறிப்பு தமிழில் பெயர்த்துத் தரப்படுகிறது :—

" திராவிட மொழிகளில் உயிரில் பொருள்களும், அறிவில் உயிர்களுமாய அஃறிணைப் பெயர்களெல்லாம் பொதுப் பாலனவே. படர்க்கைச் சுட்டு, குறிப்புப் பெயரெச்சம், படர்க்கை வினை ஆகிய இவற்றிற்கு அம் மொழிகளில் ஆண் பால், பெண்பால் என்ற பால் வேறுபாடில்லை ; ஏனைய வெல்லாப் பெயர் வினைகளும் பால் குறித்தனவே. திராவிட மொழிப் பெயர்ச் சொற்கள் வேற்றுமை கொள்ளுங் காலத்துச் சாரியை அல்லது உருபுச் சொற்களின் பிற்சேர்ப்பினாலேயே வேற்றுமை யடைகின்றன. பல்பகா வஃறிணைப் பெயர்கள் பெரும்பாலும் பன்மை குறித் தெழுதப்படா சாரியை, இடைநிலை, உருபு முதலிய திராவிட மொழிகளில் பெயர் வினைச் சொற்களுடன் பின்னிணைப்புப் பெறுவனவே யன்றி முன்னிணைப்புப் பெறுமாறில்லை. உரிச் சொற்கள் வேற்றுமை ஏலா ; †' இந்திய—ஐரோப்பிய மொழியினத்தைப் போலன்றி இத் திராவிட மொழிகளின் தனிச் சிறப்புக்களிலொன் றென்ன வென்றால், வேண்டுமிடத்துப் பண்புப் பெயரென்னும் உரிச்சொற்களை விடுத்துப் பெரும்பாலும் வினையெச்சங்களையே உரிச் சொற்களைப் போன்று பயன் படுத்துகின்றன என்பதேயாம். முண்டா மொழியினத்தைப் போன்று திராவிட மொழியினத்திலும் தன்மை முன்னிலைப் பன்மைப் பெயர்களுக்கு இரண்டிரண்டு சுட்டுப் பெயர்கள் அமைந்துள ; அவை முன்னிலையை உட்படுத்தியதும், உட்படுத்தாது விலக்கி யதுமான இருவகை. செயப்பாட்டு வினைகள் என்பது பொது

* Tha Manual of the Administration of the Madras Presidency.

† Indo—European.

வாகத் திராவிட மொழியினத்திற்கில்லை. 'படு' என்னும் வினை முதலைச் சேர்த்தே இவை இக்காலை குறிக்கப்பட்டு வருகின்றன. இந்திய—ஐரோப்பிய மொழிகளைப் போலன்றித் திராவிட மொழிகள் இடைச் சொற்களைப் பயன் படுத்துவதினும், சாரியை, உருபு முதலியவற்றையே பெருவாரியாகப் பயன் படுத்துகின்றன. திராவிட மொழிகளிலுள்ள வினைச் சொற் களுக்கும் உடன்பாடு எதிர்மறை யென்ற இரண்டும் உண்டு. சொற் றொடர்களைவிடக் குறிப்புப் பெயரெச்சங்களையே திராவிட மொழிகள் பெரும்பாலும் பயன்படுத்தி வரு கின்றன."

ஈசானியமடம் இராமலிங்க சுவாமிகள்

இவர் சிதம்பரம் ஈசானிய மடத்தைச் சேர்ந்தவர். வீர சைவ விற்பன்னர். சிவபுராணேதிகாசங்களிற் பெரிதும் பயிற்சி யுடையவர். வரன்முறையாகப் பல தமிழ் நூல்களைத் தேடிக் கற்றவர். பிறர்க்கும் போதித்தவர். பிரசங்க வன்மை, பாடுஞ் சொல்லும் ஆற்றல், உரை யெழுதும் திறமை, வீர சைவ சங்கம, ஒழுக்கம் முதலியவற்றிற் சிறந் தவர். **பூண்டி அரங்கநாத முதலியாரால்** நன்கு மதிக்கப் பெற்றவர். அவர் பாடிய கச்சிக் கலம்பகத்திற்குத் துணை புரிந்தவர். அவர் பொரு ளுதவியைக் கொண்டு குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு முதலிய நூல் களை அச்சிட்டுதவியவர். சுவாமிகள் அச்சிட்டு வெளிப்படுத்திய நூல்களாவன:—

(1) குமரகுருபரர் பிரபந்தத திரட்டு. (2) சிவப்பிரகாச சுவாமி கள் பிரபந்தத் திரட்டு. (3) திருவிளையாடற் புராணம் மூலம். (4) சீகாளத்திப் புராணம் (1882). (5) வசவ புராணம். (6) திருக் கூவப் புராணம். (7) வாயுசங்கிதை (1889). (8) சிவராத்திரிகற்ப முதலியன. (9) தோத்திரப் பிரபந்தத் திரட்டு (1897). (10) முரு கேசர் முதுநெறி வெண்பா. (11) நால்வர் நான்மணிமாலை யுரை (1896). (12) பழமலை யந்தாதி யுரை.

பெரியபுராணத்திற்கு ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் எழுதிய உரையை முற்றுப்பெறச் செய்தவர். நால்வர் நான்மணிமாலைக்கு இவர் எழுதிய விருத்தியுரை மிகச் சிறந்து விளங்குகின்றது.

சுவாமிகளின் மாணக்கர்களிற் சிறந்தவர்: க. வ. திருவேங்கட நாயுடு, சே. சூரப்பநாயுடு முதலியோர். இவரை ஆதரித்தவர் சென்னை யிற் சில ஆண்டுகளுக்கு முன் விளங்கிய காயாறு ஞானசுந்தர ஐயரும் பாளையம் சோமசுந்தரம் செட்டியாருமாவர். 1906-ஆம் ஆண்டில் இவர் சென்னைக்கு வந்திருந்தபோது நெடுநாள் பீடிக்கப்பட்ட விரை நோய்க்கு அறுவை மருத்துவம் செய்து கொண்டார். அம் மருத்து வத்தால் நல மடையாமல் திடீரென இறைவனடி யடைந்தார். இவருக்கு அப்போது வயது 55 இருக்கலாம்:

செய்திகளும் குறிப்புக்களும்

ஆர்க்காடு சர் இராமசாமி முதலியார் அவர்கள் இந்திய அரசியல் உறுப்பினராக அமர்த்தப் பெற்றுள்ளமை பொதுவாகத் தென்னாட்டினர்க்கும் சிறப்பாகத் தமிழ் நாட்டினர்க்கும் மகிழ்ச்சியை அளிப்பதாகும். அருங்கலைவாணர், பெருஞ்சொற் கொண்டல், கூர்த்த அறிவினர் ; அத்தகையார் தாம் ஏற்கப் போகும் பதவிக்கே ஒரு தனிப் பெருமையளிக்கும் ஆற்றல் வாய்ந்தவர் என்று கூறவும் வேண்டுமோ? அவ் வாண்டகையார் பன்னெடுநாள் உடல் நலனுடனிருந்து தேயத் தொண்டாற்றி வருமாறு இறைவன் அருள் புரிவானாக.

* * *

சர் இராமசாமி முதலியார் அவர்கள் இலண்டனில் இந்திய அமைச்சர் அவையில் வகித்திருந்த உறுப்பினர் பதவிக்கு நந்நாட்டினராகிய திரு **இ. இராகவேந்திரராவ் நாயுடு** அவர்கள் அமர்த்தப் பெற்றிருப்பதும் மகிழ்ச்சியை விளைவிப்பதாகும். சென்னைக்கு அண்மையில் வந்திருந்தகாலை, கட்டாயமாகச் சமயக் கொள்கைகளை மக்கள் மாட்டுப் புகுத்திக் கேடுவிளைப்பதை யொப்ப, பிறமொழியைக் கட்டாயமாகப் புகுத்தி ஒரு நாட்டினரைக் கற்கச் செய்வதும் கேடுவிளைப்பதாகும் என்று அஞ்சாது அறுதியிட்டுக் கூறிய அப் பெரியார், திரு இராகவேந்திரராவ் நாயுடு அவர்களும் உடல்நலனுடனிருந்து பன்னெடுநாள் நலம் புரிந்து வருமாறு இறைவன் அருள் புரிவானாக.

* * *

சென்னை அரசியற் செயலாளர்களுள் ஒருவராகிய **திரு. என். எஸ். வரதாச்சாரியார்** அவர்கள் திருவல்லிக்கேணியில் 26-4-39-இல் நடைபெற்ற கூட்டமொன்றில் "இந்திமொழியிற் சென்னை அரசியலார் கொண்டுள்ள அளவுகடந்த ஆர்வத்திற்கறிகுறியாக, தமிழ் நாட்டு இந்துஸ்தானி ஆசிரியப் பயிற்சிப் பள்ளியைக் கோவையிலுள்ள கண்கவர் வனப்பமைந்த **அரசியல் அடவிக் கல்லூரிக்** கட்டிடத்தில் அமைத்துள்ளார்கள்" என்று பெருமையாகப் பேசினார். அமைத்துள்ள அரசியல் **அடவிக்** கல்லூரி எடுத்துக் கொண்ட மொழியின் சிறப்புக் கேற்ற இடந்தான் என்று கூறவும் வேண்டுமோ ? மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் இந்திமொழிப் பயிற்சியால் இப்பொழுது புறக்கணிக்கப்பட்டு வந்துள்ள வடமொழிக் கலைச் செல்வத்தை மீண்டும் எளிதிற் பெறலாம் என்றுங் கூறினர். இதுவே உண்மை !

* * *

சென்னை அரசாங்க மருத்துவத் துறையில் அலுவல் பார்த்து வரும் நோய் மருத்துவ அதிகாரிகளும், அறுவை மருத்துவ அதிகாரிகளும் அரசாங்க அலுவலை யொழித்துத் தனிப்பட்ட முறையில் நோயாளிகளுக்கு மருந்து கொடுத்தோ அறுவை செய்தோ நோயாற்ற ஒப்புக்கொள்ளுதல் கூடாதெனச் சென்னை அரசாங்கத்தார் தடையாணையொன்று பிறப்பித்துள்ளார்கள்.

* * *

காந்தியார் வகுத்துள்ள வார்தாக் கல்வித் திட்டத்தைப் பின்பற்றிக் கல்வியளிக்கப் புகுவதால் ஏழை மக்களின் குழந்தைகளுக்குப் பேரிடர் விளையுமென்றும் அவர்கள் பெருஞ் செல்வர்க்கு அடிமைப் பட்டுக் கிடக்கும் நிலை மேலும் யாப்புறுத்தப்பெறும் என்றும் சென்னை மண்டில ஆட்சியாளராக விருந்த சர் கே. வேங்கடரெட்டி நாயுடு அவர்கள் கருதுகின்றார்கள்.

* * *

பம்பாயில் 5-5-39-ல் நடைபெற்ற தென்னிந்திய மக்கள் கூட்டமொன்றில் பேசிய டில்லி அரசவையுறுப்பினர் திரு. எஸ். சத்திய மூர்த்தி ஐயர் அவர்கள் "பெடரேஷன்" என்ற இணைப்பியல் முறையை இயன்றவரை காங்கிரஸ்காரர்கள் எதிர்த்துப் பார்ப்பார்கள் என்றும், அவ்வெதிர்ப்பைப் பொருட்படுத்தாது அரசியலார் அம் முறையைக் கட்டாயமாகப் புகுத்துவார்களானால், அதையேற்று அத் திட்டத்திலுள்ள பதவிகளையெல்லாம் கைப்பற்றி நடத்தி வைப்பார்கள் என்றும் கூறினாராம். இது தமிழ்நாட்டார் எதிர்பார்த்ததே!

* * *

ஆந்திர மண்டிலம் தனியாகப் பிரிக்கப் பெற்று, அங்கு ஆந்திர மண்டிலச் சட்டசபை யமைக்கப் படுங்காலத்து, நடைமுறைகளெல்லாம் தெலுங்கில்தா னிருக்கவேண்டும் எனத் தாம் வற்புறுத்தப் போவதாகச் சென்னைச் சட்டசபைத் தலைவர் திரு. புலுசு சாம்பமூர்த்தி காரு கூறினாராம். இம் மொழிப் பற்று நந்தமிழ் நாட்டுப் பெரியோர்கள் ஒவ்வொருவர் மாட்டுந் தவறுமறக் காணப்பெறும் நாள் எந்நாளோ!

* * *

23-4-39-ல் நன்னிலம் போர்டு உயர்நிலைப்பள்ளிக் கழகத்தின் சார்பாக நடந்த கூட்டமொன்றிற் பேசிய, அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சொற்பொழிவாளர் திரு. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் செருத்துணை நாயனார், இயற்பகை நாயனார் ஆகிய இரு சைவப் பெரு மக்களின் வரலாற்றினை எடுத்துக் கூறித் தமிழ்மக்களின் போர்த் திறனை விளக்கினார். அவரைத் தொடர்ந்து பேசிய அண்ணாமலைப் பல்கலைக் கழக வரலாற்று நூற் பேராசிரியர் இராவ் சாஹேப் சி. எஸ். சீனிவாசாசாரியார் அவர்கள் வேளாளர், கள்ளர், மறவர் ஆகிய தமிழ்முதுகுடியாளரின் போர்த்திறனை மறுக்கொணா வகையிற் சான்று காட்டி விளக்கினர்.

* * *

"வடவிந்தியாவில் வசிப்பவர்களெல்லாம் ஆரியர்கள் என்றும், நாட்டிற் காணப்படும் சிறந்த முறைகளெல்லாம் ஆரிய நாகரிகத்தின் பாற் பட்டனவே யென்றும் ஆராய்ச்சியாளர்கள் பலர் நம்பி வருகின்றார்கள். மக்கள் உடலமைப்பிலக்கண முறையும், கல்வெட்டாராய்ச்சிகளும் இவை பிழைபட்ட முடிபுகள் என்பதை நன்கு விளக்கியுள்ளன. மோஹஞ்சதாரோவில் தோண்டியெடுத்துக் காணப் பெற்ற பண்டைய நகரத்தில் இருந்தோர்களாகக் கருதப் பெறுபவர் ஆரியர்களல்லர் என்பது திண்ணம். அவர்களுடைய சவக்குழிகளை யாராய்ந்து பார்த்தால் இவ்வுண்மை நன்கு விளங்கும்.

அன்றியும் அக்காலத்தில் இந்திய நாட்டிடை ஆரியர்களில் மிகவும் குறைந்த தொகையினரே வந்தேறியிருத்தல் கூடும் என்றும் தெரியக் கிடக்கின்றது. இந்தியாவினுட் புகுந்த ஐஞ் சிறு ஆரியக்குடியினரும் பஞ்சாப் ஆற்றைக் கடந்துவந்து இப்பொழுது "யுனைட்டட் பிராவின்ஸெஸ்" என்றழைக்கப்பெறும் மத்திய இந்தியாவில் உறைந்து வந்தனர். இந்தியப் பெருநாட்டின் ஏனைப் பகுதியில் அக்காலை யிருந்தோர்களெல்லாம் திராவிடர்களே. "பீகார்" என்னும் மகதநாட்டுத் திராவிட மன்னர்களைப் பாடிப் பரிசில்பெற்ற புலவர்களையும் பாணர்களையும் ஆரியர்கள் எவ்வளவுக்கு இழித் துரைத்து வந்தார்களென்பதற்குச் சான்றுகள் பலவுள.

எனினும், இந்திய நாடெங்கணும் ஆரியர் தங்கள் ஆட்களை அனுப்பித் தங்கள் சமயநெறியைப் பரப்பிவரச் செய்தனர். அவ்வாறு பணியாற்றத் தென்னாட்டிடை வந்தவர்களுள் ஒருவரே பார்ப்பன ராகிய **அகஸ்தியர்.** இத்தகைய முயற்சியால் ஆரியச் சமயநெறி முறைகளும், மொழிகளும் சிறுகச் சிறுக திராவிடத்துடன் கலப்புற்றமை இதனாற் போந்த விளைவாம்.

மொஹெஞ்சதாரோவைத் தோண்டி ஆராய்ந்த **சர் ஜான் மார்ஷெல்** என்ற பெரியார் சிந்துச் சமவெளி நாகரிகம் திராவிட நாகரிகமே யென்றும், அது ஏறக்குறைய கி. மு. 5,000 ஆண்டுகட்கு முற்பட்டதென்றும் அறுதியிட்டுக் கூறினர்."

இவ்வளவும் **ரேவரெண்டு ஹீராஸ் பாதிரியார்** கோடைக்கானலில் அண்மையில் நிகழ்த்திய சொற்பொழிவுகளின் சாரமாகும்.

* * *

தமிழ்ப் பாதுகாப்புக் கழகத்தார் வேண்டுகோள்

சென்னைத் தமிழ்ப் பாதுகாப்புக் கழகத்தாரால் மதுரை நாட்டாண்மைக் கழகத்திற்குத் (ஜில்லா போர்டுக்கு) தமிழிலேயே நடவடிக்கை நடத்தவேண்டுமென்றும் கடிதப் போக்கு வரத்துக் களையும் தமிழிலேயே நடத்தவேண்டுமென்றும் கடிதம் எழுதப் பட்ட தென்றும் அதன்படி செய்து வருவதாக மதுரை நாட்டாண்மைக் கழகத்தார் அறிவித்திருப்பதாகவும் மதுரை நாட்டாண்மைக் கழகத் தாரைப் போல ஏனைய நாட்டாண்மைக் கழகத் தலைவர்களும் ஆணையாளர்களும் தங்கள் அலுவலகங்களின் நடவடிக்கைகளையும் பிறவற்றையும் தமிழ் மொழியிலேயே நடத்துமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றார்கள் என்றும் ஆங்காங்கே தமிழறிஞர்கள் அதற்கு முயல வேண்டுமென்றும் தமிழ்ப் பாதுகாப்புக் கழகத்தார் வேண்டிக் கொள்கின்றனர்.

தமிழர்களே நீங்கள் தமிழராக வாழ்கின்றீர்களா? இல்லையே இனியேனும் தமிழராக வாழ்க

(சென்னை, தமிழ்ப் பாதுகாப்புக் கழகத்தார்)

உங்கள் பெயர்களெல்லாம் நூற்றுக்குத் தொண்ணூறு விழுக் காடு வடமொழிப் பெயர்களாகவும் பிறமொழிப் பெயர்களாகவும் காணப் பெறுகின்றனவே!

உங்கள் மாளிகைகட்கு இடப்பெறும் பெயர்களெல்லாம் லக்ஷ்மி நிவாஸ், ஸ்ரீநிவாஸ், கணேஷ் விலாஸ், சரஸ்வதி பவனம், ஆசசார்ய கிருஹம், சன் வியூ, சரோஜினி கார்டன்ஸ், பாம் கிரோவ், பிரிட்ஜ் ஹவுஸ், லேக் வியூ, சுதர்சனம், லட்சுமி பாக், ஹரித்துவார் என்று நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது விழுக்காடு தமிழல்லாத பிற மொழிப் பெயர்களாகக் காணப்பெறுகின்றனவே!

தொழில் நிலையங்களெல்லாம், கிருஷ்ணா விலாஸ், லக்ஷ்மி விலாஸ், ஜெகதாம்பிகா விலாஸ், நியூ கோமளா விலாஸ், மாடர்ன் ஹிந்து ரெஸ்டாரண்ட், சரஸ்வதி விலாஸ், மினர்வா, சென்டிரல், எடுகேஷனல் பப்ளிஷிங் ஹவுஸ், ஜூப்பிடர் பிரஸ், லிபர்டி பிரஸ் என்று நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு பிறமொழிப் பெயர்கள் இடப் பெற்றிருக்கின்றன.

பேசும் படச் சாலைகளெல்லாம் லட்சுமி டாக்கீ, ஸ்டார் டாக்கீ பிராட்வே டாக்கீ, பாலஸ் டாக்கீ, வெல்ஸ், பாரகன், சரஸ்வதி டாக்கீ, ராக்ஸி டாக்கீ, ஸாகர் டாக்கீ என்ற பிறமொழிப் பெயர்களாலேயே வழங்கப் பெறுகின்றன.

உணவு விடுதிகள் ஹோட்டல் ரெஸ்டாரெண்ட், கபே, கிளப், லஞ்சஹோம் என்றும், முடிவெட்டு மிடங்கள் ஷேவிங் சலூன், ஹேர் கட்டிங் சலூன், கிராப் செய்யுமிடம் என்றும், சலவைச் சாலைகள் லாண்டரி, வாஷிங் கம்பனி என்றும், பிறமொழிகளில் வழங்கப் பெறுகின்றனவே!

தமிழ்மக்கள் ஒருவரைக் கண்டால் வணக்கம், நலந்தானா? என்று சொல்வதை விட்டு நமஸ்காரம், க்ஷேமந்தானா என்று பிறமொழியில் பேசுகின்றார்களே!

தமிழ்மக்கள் ஒருவர்க்கொருவர் பேசும்போதும், எழுதும் போதும் தமிழில் பேசவும் எழுதவும் செய்கின்றார்களில்லையே!

இவைபோன்ற தமிழ்வளர்ச்சிக்குக் கேடு விளைக்கும் முறைகள் இன்னும் எத்தனையோ பின்பற்றப்பட்டு வருகின்றனவே! இவற்றிற் கெல்லாம் நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்? இவற்றை எல்லாம் அறவே ஒழித்துத் தமிழின் தூய்மைக்கும் திருந்திய வளர்ச் சிக்கும் வழி தேடும் வாய்ப்பு நேர்ந்திருக்கும் இந்நாளில் நீங்கள் தூங்கிக்கொண்டிருப்பது தகுமா? விழித்தெழுமின்! வீறுகொண் டெழுமின்! தமிழ்த் தொண்டு புரிமின்! விடுதலை பெறுமின்!

நூல் வரவு

ஞானமணி விளக்கு: இருக்கம். ஆதிமூல முதலியாரவர்கள் இயற்றியது. "ஞானமணி விளக்கு எங்கள் அகத்தில் பிரகாசிக்கிறது; பலர் அகத்திருளை ஓட்டும் வன்மையது என்பது எங்கள் கருத்து" என்று திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அவர்களால் புகழப்பெற்றது. சமய உண்மைகளைத் தெளிவாக விளக்குவது. 64 பக்கங்கள் கொண்டது. சென்னை சிவனடியார் கூட்டத்தின் வெளியீடு. விலை அணா நான்கு.

புலவர் திலகம் மஹம்மது இக்பால்: *அ. ஆதம் ஷாஹ் (ஜமாலி) ஆசிரியர். முகம்மதியப் புலவர் திலகமாயிருந்த கவியரசர் சர் முகம்மது இக்பால் அவர்களின் சீரிய வாழ்க்கை முறையினைப் பற்றித் தெளிவாக எளிய நடையில் விளக்குவது.* 75 *பக்கங்கள் கொண்ட சிறு நூல்; கீழக்கரை முஸ்லிம் வாசகசாலையாரால் வெளியிடப் பெற்றது.* விலை அணு நான்கு

சித்திரக்கவி விளக்கம்: *சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதராயிருந்து காலஞ்சென்ற திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அவர்கள் பாடியமைத்த செந்தமிழ்ச் சித்திரக் கவிகளும் அவற்றிற்குச் சிதம்பரம் அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழாசிரியராயிருந்த திரு. ந. பலராம ஐயர் அவர்கள் இயற்றிய உரையுங் கொண்டது.* 72 *பக்கங்கள் கொண்ட அழகிய சிறு நூல்.* விலை அணு ஐந்து

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் சரித்திரச் சுருக்கம்: *அழகிய இச் சிறுநூல்* **பரிதிமாற் கலைஞன்** *என்று வீறுடன் தமிழ்ப் பெயர் புனைந்துகொண்ட தமிழ வல்லார் திரு. சாஸ்திரியார் அவர்களின் வரலாறு தெரிவிப்பது. அவர்தம் அருமை மகனுர் திரு. வி சூ. நடராஜ சாஸ்திரியார் எழுதியது. இப்பெரியார் வரலாறு இதுவரையில்லையே என்ற குறை ஒருவாறு நீங்கிற்று இச் சிறுநூலால். இதன் விலை* அணு இரண்டு.

—கா. சிவ க.

அகலிகை வெண்பா: *ராவ்சாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் இயற்றிய அகலிகை வெண்பா என்னும் பிரபந்தத்தின் மூன்றும் பதிப்புக் கைவரப்பெற்றுப் படித்து மகிழ்ந்தேன். பாக்களின் நடையும் பொருளும் பழைமையும் புதுமையுந் தழுவி இன்புறுத்துகின்றன. ஆக்கியோரது கற்பனுசக்தியின் பெருமை நன்கு புலனுகின்றது. அகலிகை காகுத்தன் காலிற்பட்டுக் கல்லுரு நீத்துப் பெண்ணுரு வெய்தியவாறுபோல், அவளது வரலாறு முதலியாரவர்கள் வாக்கிற்பட்டுப் பெருமையடைந்துளது என்று கூறுவதும் பொருந்தும் போலும்? இந்நூலின் சிறப்பைக் குறித்து,*

தருவுளுயர் கற்ப தருமானும்; ஆனுள்
சுரபிபோலும்; பெருஞ் சோதிப்—பருமணியுள்
மாசிலாச் சிந்தா மணியொக்கும்; வெண்பாவுள்
ஆசில் அகலிகைவெண் பா.

என, அவர்கள் பாடியதொரு பாட்டையே (அகலிகை வெண்பா 59) *சிறிது மாற்றிக் கூறுவது எனக்கு மகிழ்ச்சி யளிக்கிறது.*

—ந. மு. வேங்கடசாமி நாட்டார்.

திரு. சி. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள்